99

# புது முறைத்
# தமிழ் மணி வாசகம்

## ஐந்தாம் வகுப்பு

THE REGISTRAR OF BOOKS
MADRAS



பாலகிருஷ்ணக்கோன்

சென்னை

TB
031,6 (50)
N48
139740

## Pudu Murai

# Tamil Mani Vachagam

### Class V

[Revised—1948]

Vidwan S. CRUZ ANTHONY, B. O. L.
Tamil Pandit, St. Xavier's College
Palamcottah

OFFICE OF THE
12 JAN 49
MADRAS

**E. M. GOPALAKRISHNA KONE**

**MADURA : : MADRAS**

**Rights Reserved )** **1948** **( Price 0-10-6**

# பொருளடக்கம்


| எண் | பாடம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | சமயோசித புத்தி .... | 3 |
| 2. | பாட்டு .... | 10 |
| 3. | வறுமை கொடிது .... | 18 |
| 4. | கார் விபத்து .... | 25 |
| 5. | தமிழ் மொழி வாழ்த்து (செய்யுள்) .... | 28 |
| 6. | நம்பிக்கை மோசம் .... | 29 |
| 7. | காப்பி .... | 33 |
| 8. | உரையாடல் .... | 41 |
| 9. | நமது தேசம் (செய்யுள்) .... | 47 |
| 10. | கெடுவான் கேடு நினைப்பான் .... | 49 |
| 11. | கவியரசி .... | 55 |
| 12. | தீமைக்கு நன்மை .... | 61 |
| 13. | முயற்சி வீணாகாது (செய்யுள்) .... | 65 |
| 14. | கருணையன் .... | 66 |
| 15. | நன்றியுள்ள நாய் .... | 71 |
| 16. | கடிதம் எழுதும் முறை .... | 74 |
| 17. | தேகாப்பியாசம் (செய்யுள்) .... | 76 |
| 18. | உத்தம நண்பர்கள் .... | 77 |
| 19. | தளவாய் அரியநாத முதலியார் .... | 83 |
| 20. | நம் நாட்டு விஞ்ஞானிகள் .... | 93 |
| 21. | மாணவர் ஊக்கம் (செய்யுள்) .... | 98 |
| 22. | சகுந்தலை .... | 99 |
| 23. | மகாத்மாவின் அருள் மொழிகள் .... | 105 |


## செய்யுட் பாடம்


| | | |
| --- | --- | --- |
| 1. | நன்னெறி .... | 109 |
| 2. | நீதி வெண்பா. 3. நீதி நெறி விளக்கம் | 110 |
| 4, | தனிப் பாடல்கள் .... | 111 |
| 5. | கயிலாசநாதர் சதகம். 6.விவேகசிந்தாமணி | 112 |

Revised Edition—1948

# முகவுரை

மனதில் உதிக்கின்ற எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குத் தகுந்த சொற்களை உபயோகிக்க பாஷையை நன்கு பயிலவேண்டும். எனவே, ஒரு மாணவன் சிறு வயதில் தான் ஒவ்வொரு நாளும் கேட்ட சொற்களை எந்தெந்த இடங்களில் உபயோகிக்க வேண்டும் என்று அறிந்துகொள்ள வேண்டும். **அரசியலார் 1939-ம் வருடம் ஏற்படுத்திய ஆரம்பப் பாடசாலையின் பாடத்திட்டத்தின்படி** புதியமுறையில் இப் புதுமுறைத் தமிழ்மணி வாசகங்கள் வெளிவருகின்றன. ஆரம்பமுதல் ஐந்து வகுப்புவரை இவற்றை முறையே கற்ற மாணவர் நமது தாய்ப் பாஷையாகிய தமிழ் மொழியில் தக்க ஆற்றல் பெற்றவராவர் என்பது எமது துணிபு. கலாசாலை ஆசிரியர்கள் இவைகளை ஆதரித்து என்னை இப் பணியில் ஊக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

—ஆசிரியர்.

Printed at the Excelsior Power Press, Madura:-48.

139740

# புது முறைத்

# தமிழ்மணி வாசகம்

## ஐந்தாம் புத்தகம்

### 1. சமயோசித புத்தி

631,6/3

| | | | |
|---|---|---|---|
| விசுவாச காதகன் | ஆயுட்காலம் | ஆதிக்கம் | மறுத்து |
| அந்நியோன்னியம் | சமயோசிதம் | சுருக்காய் | திணறி |
| சோடசோபசாரம் | அத்தியந்தம் | நறுங்கனி | அச்சம் |
| வெறும் இருதயம் | தினந்தினம் | கிலேசம் | சுவை |
| நானாவார்த்தை | சுமுகன் | வானரம் | ஆருயிர் |
| இல்லக்கிழத்தி | பிடிவாதம் | கொள்ளி | நாவல் |
| ஆத்ம நண்பன் | மைத்துனி | இன்னே | மூப்பு |
| பதார்த்தங்கள் | பாதகன் | கடுகடுப்பு | அடம் |
| பச்சாத்தாபம் | மித்திரன் | அருமந்த | திட்டு |
| முகவாட்டம் | கங்கை | அமுதம் | மீதி |

கங்கைக் கரையில் உள்ள ஒரு நாவல் மரத்தில் சுமுகன் என்னும் ஒரு வானரம் வாசம் பண்ணிக் கொண்டிருந்தது. அப்பொழுது ஓர் இளைத்த முதலை அங்கு வந்தது. உடனே குரங்கு, "நீ என் வீட்டிற்கு வந்ததால் உனக்கு நாவற் கனி தருகிறேன்" என்று சில பழங்களைக் கொடுத்தது. முதலை அத்தியந்த சந்தோஷத்துடனே அவற்றை வாங்கித் தனது இருப்பிடத்திற்குப் போய்ச் சாப்பிட்டது. பின்னர்

தினந்தினம் அம்மரத்தடிக்கு வந்து, நானு வார்த்தைகள் பேசிக்கொண்டு முதலையும் குரங்கும் அந்நியோன்னியமாக இருந்தன.

ஒரு நாள் முதலை குரங்கினிடமிருந்து சில கனிகளைப் பெற்று, அவற்றைக் கொண்டு சென்று, தன் இல்லாட்குக் கொடுத்தது. அவற்றைத் தின்று பார்த்த அப் பெண் முதலை, தன் நாயகனைப் பார்த்து, "பிராணநாதா, இவ் இனிய கனிகளை எங்கிருந்து கொண்டு வந்தாய்?" என்று கேட்க ஆண் முதலை, "பெண்ணே, சுமுகன் என்னும் குரங்கு நண்பன் எனக்குத் தினந்தோறும் பழங்கள் கொடுக்கிறன். நான் அவைகளைத் தின்று வருகிறேன். நான் தின்ற மீதியை இன்று இங்குக் கொண்டு வந்தேன்," என்று சொல்லிற்று.

இம் மொழிகளைக் கேட்ட பெண் முதலை, "இக் கனிகள் அமுதம்போலிருக்கின்றன. இக் கனிகளை எப்பொழுதும் சாப்பிடுகிறவனுடைய ஈரல் அமுதம் போன்றுதான் இருக்கும்; ஆதலால், அதைக் கொண்டு வந்து எனக்குக் கொடு. அதை உண்டால் நான் மூப்பில்லாமல் நெடுங்காலம் சுகித்திருப்பேன்," என்றது. இதனைக் கேட்ட முதலை, "எனதாருயிர் நண்பனுக்கு இத்தகைய தீங்கை நினைக்கலாமா?" என, பெண்முதலை, "நான் உன் வீட்டுக்கு அவசியமாயிருந்தால் அதன் ஈரலைக் கொண்டு வந்து கொடு; இல்லாவிட்டால் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்றது.

அப்பொழுது ஆண் முதலை, "பெண்ணே, உடன் பிறந்தானைவிட மித்திரனே சிலாக்கியமானவன். ஆதலால், நீ அடம் பண்ணுதே" என்று மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்டது. பெண் முதலை சினந்து, "என தாயுட்காலத்தில் நீ ஒரு நாளும் மறுத்துச் சொன்னதில்லை; இன்றுதான் நீ என் பேச்சை மறுக்கிருய்; ஆதலால் இதோ எனதுயிரைப் போக்கிக்கொள்கிறேன் பார்" எனப் பிடிவாதஞ் செய்தது. தன் மனைவியின் பிடிவாதத்தைக் கண்ட ஆண்முதலை "நீயோ பிடிவாதமாய் இருக்கின்ருய். சுமுகனே கொல்லக்கூடாதவனய் இருக்கின்ருன். ஆதலால், யான் இருதலைக் கொள்ளி எறும்புபோ லானேன்" என்று சொல்லிக் குரங்கினிடம் சென்றது.

விசனமாயிருந்த முதலையைக் குரங்கு பார்த்து, "ஏன் இன்று முகவாட்டத்துடன் இருக்கிருய்?" என்று கேட்க, முதலை, "விசேஷம் ஒன்றுமில்லை. உன் மைத்துனி என்னைக் கோபித்துக் கொள்கின்ருள்; 'நன்றி கெட்ட துஷ்டா, நமக்குத் தினந்தோறும் பழம் கொடுக்கின்ற அந்த வள்ளலை நம் வீட்டிற்குக் கொண்டு வந்து ஒரு நாளாவது சோடசோபசாரம் செய்ய வேண்டாமா? வெட்கங் கெட்டு, அவன் வீட்டிற்கு மாத்திரம் போகின்ருயே!' என்று திட்டுகின்ருள். ஆதலால், என் பின்னே வா. உன் மைத்துனி பதார்த்தங்களைச் சமைத்து வைத்துக் கொண்டு வழி பார்த்திருப்பாள்" என்றது.

அக் குரங்கு, "நண்ப, என்னால் தண்ணீரில் வரமுடியாது. ஆதலால் என் அருமந்த மைத்துனியை இங்கே கூட்டிக்கொண்டு வா" என்று மறுத்துக் கூறியது. முதலை, "நண்பா, நான் கரையில் வந்து நின்றுகொள்ளுகிறேன். நீ சிறிதும் பயப்படாமல் என் முதுகின்மேல் ஏறிக்கொள்; நான்




நோவாமல் உன்னைச் சுமந்துகொண்டு என் வீட்டுக்குப் போவேன்" என்று சொல்லிற்று. குரங்கு அச்சொற்களை உண்மையென நம்பி, அதன் முதுகின் மேல் ஏறிக்கொண்டது. முதலையும் தண்ணீரிற் குதித்து நீந்திச் சென்றது. முதுகின்மேலிருந்த குரங்கு, "என்னுயிர் நண்பனே, எனக்கு அச்சமாயிருக்கின்றது; மெதுவாகச் செல்" என்றது.

முதலை, 'இப்போது குரங்கு என்னுடைய ஆதிக்கத்தில் இருக்கின்றது. என்னைவிட்டுத் தப்ப முடியாது. ஆதலால் என் கருத்தை யான் வெளியிடுவேன்; உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?' என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, "நண்பனே, உனது இஷ்ட தேவதையை நினைத்துக்கொள். என் இல்லக் கிழத்தியின் முரண்டினால் உன்னுயிரை வாங்கப் போகின்றேன்" என்று சொல்ல, குரங்கு திணறி, "நான் என்ன பிழை செய்தேன்?" என்றது.

முதலை, "நீ கொடுத்த நறுங் கனிகளை என் வீட்டுக்காரிக்குக் கொடுக்க, அவள் அவைகளைத் தின்று சுவையை நன்குணர்ந்து, 'இப் பழங்களைத் தின்றுகொண்டிருக்கும் புண்ணியவானின் ஈரல் அமிர்தமாயிருக்கும். ஆதலால் அவன் ஈரலைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்' என்று பிடிவாதஞ் செய்கிறாள். அவள் சொல்லை மறுக்க மாட்டாது உன்னைக் கூட்டிச் செல்கிறேன்" என, அதைக் கேட்ட குரங்கு, அவசரப்படாமல் சிந்தித்துச் சமயோசிதமாய், "அடா, நண்பனே! இந்தச் சமாசாரத்தை எனக்கு ஏற்கனவே அறிவித்திருந்தால், 'நான் மரத்தில் ஒளித்து வைத்திருக்கின்ற எனது ஈரலை என் அருமை மைத்துனிக்கு அங்கேயே எடுத்துக் கொடுத்திருப்பேனே! இப்பொழுது நான் வெறும் இருதயத்தோடல்லவா இருக்கிறேன். என்னை வீணே கொண்டுவந்து விட்டனையே" என மிகுந்த கிலேசப்பட்டது.

அதைக் கேட்ட முதலை, "எனது ஆத்ம நண்பா, அந்த ஈரலைக் கொடுத்தால் என் மனைவி மிகுந்த சந்தோஷமாக இருப்பாள்" என்று சொல்லி மீண்டும் அதி சீக்கிரத்தில் குரங்கைக் கரையில் கொண்டு வந்துவிட்டது.

வானரம் மரத்தின் மேல் தாவி ஏறிக்கொண்டு, 'எமன் கையில் இருந்து தப்பினேன்' என்று சிந்தனை செய்யும்பொழுது, முதலை, "நண்பனே, ஈரலை விரைவில் கொடு. உனது மைத்துனிக்குக் கொடுத்துவிட்டு நான் வருகின்றேன்," என்று கேட்டது.

குரங்கு நகைத்து, "அடா! பாதகா! ஈரல் உடம்பை விட்டுப் பிரிந்திருக்குமா? நீ விசுவாச காதகனாதலால் என் முன் நிற்க வேண்டாம்" என்று கடுகடுப்பாய்ச் சொல்லிற்று.

முதலை தன் செயலுக்குப் பச்சாத்தாபமுற்று, 'இவனுக்கு உண்மை சொல்லிக் காரியத்தை இழந்தோம். இவனை மறுபடியும் நம்பும்படி செய்ய வேண்டும்' என்று உறுதி செய்து கொண்டு, "நண்பனே, உன்னைச் சோதித்துப் பார்க்கலாமென்று இப்படிச் சொன்னேன். உலகத்தில் என்றும் நடவாத உன் பேச்சை நிசமென்று நம்பிக் கொண்டு உன்னைத் திரும்பக் கொண்டுவரவில்லை. ஈரல் உடலைவிட்டுப் பிரியாதென்பது சிறு குழந்தைக்குந் தெரியும். நீ என் வீட்டுக்குக் கிஞ்சித்தும் பயமில்லாது வரலாம். உன் மைத்துனி உன்னை

எதிர்பார்த்துக்கொண் டிருப்பாள்'' என, குரங்கு, "உன் பேச்சை நம்ப மாட்டேன்'' என்றுரைத்து, அந்த மரத்தில் சௌக்கியமாக வாழ்ந்துகொண்டிருந்தது.

## கேள்விகள்

1. முதலைக்கும் குரங்குக்கும் எவ்வாறு சிநேகம் உண்டாயிற்று ?

2. பெண் முதலை ஏன் குரங்கின் ஈரலைக் கேட்டது?

3. குரங்கின் சமயோசித புத்தி எவ்வாறு தெரிகின்றது ?

4. 'இருதலைக் கொள்ளி எறும்பு,' 'உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா' இந்தப் பழமொழிகள் எந்த இடத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன ?

## பயிற்சி

1. அத்தியந்த சந்தோஷம், அந்நியோன்னியமாக, பல பல பதார்த்தங்கள், இஷ்டதேவதை, இவ்வார்த்தைகளைத் தனித் தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. எதிர்ப்பால் எழுது: மைத்துனி, கிழத்தி, காதகன்.

3. நல்லாள், இல்லாள்:— இரண்டு அர்த்தம் எழுது.

4. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைத்து வாக்கியங்களை எழுது:—

(அ) நண்பன் எனக்குத் தினந்தோறும் ———— கொடுப்பான். (பலங்கள், பழங்கள்)

(ஆ) உன் மைத்துனி பல பல பதார்த்தங்களைச் சமைத்து ———— பார்த்துக்கொண் டிருக்கிறாள். (வலி, வழி).

## 2. பட்டு

| | | | |
|---|---|---|---|
| கான்ஸ்டாண்டினோபிள் | புத்தம் புதிய | பாரசீகம் | பகவதி |
| மத்திய தரைக்கடல் | கைத்திறம் | இழுக்கு | நுட்பம் |
| உரோம ராஜ்ஜியம் | தலை சிறந்த | ஊக்கம் | கண்ட |
| அலெக்ஸாண்டர் | தேவதை | புராணம் | கூர்ந்து |
| மெள்ள மெள்ள | தலையுடை | கவனம் | திரித்து |
| முசுக்கோட்டை | யாத்திரை | வனப்பு | கற்றை |
| மேன்மையான | யவன வீரர் | மேனாடு | நூற்று |
| பளபளப்பான | ஐரோப்பா | நூற்கதிர் | சீனம் |
| நூலுருண்டை | பிளாரன்ஸ் | இராணி | பட்டு |
| ஜஸ்டீனியன் | புழுக்கூடு | கெஜம் | சிக்கி |
| வற்புறுத்திய | பூஷணம் | மிலான் | பூச்சி |
| ஜப்பானியர் | ஆங்கிலம் | ஆசியா | தீவு |

முற்காலத்தில் சீன தேசத்தில் ஒரு இராணி யிருந்தாள். அவளது பெயர் சி. லிங்ஷி என்பது. அவள் ஒரு நாள் நந்தவனத்திற்குச் சென்று, அங்கிருந்த முசுக்கொட்டை மரங்களில் இளஞ் சூரியனது ஒளிக் கற்றைகள் பரவி வீசுவதைத் தன் கூரிய கண்கள் இமையாமலும், அக்கம் பக்கம் செல்லாமலும் ஆழ்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயம், திடீரென ஒரு மரத்தின் கிளையில் ஒரு பட்டுப் பூச்சி தன் னுடலிலிருந்து நூற்ற நூலைக்கொண்டு, ஒரு சிறு வீடு கட்டுவதைக் கண்டு வியப்புற்றாள்.

அம் மங்கையர்க்கரசி அந்த நாள் முழுவதும் அப் பூச்சியையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்

தாள். அப்போது அப் பூச்சியினுடைய தலையின் அடியிலிருந்து ஒரு பளபளப்பான பிசின் போன்ற நூல் இடையறுது ஒழுகிக்கொண் டிருந்தது. அது, அந் நூலைத் தன்னுடல் முழுவதிலும் சுற்றிச் சுற்றித் தன்னுடலை யொரு புழுக்கூடுபோல் செய்து கொண்டது. ஒரே நூலாலாகிய அந்தக் கூடு, பஞ்சு நூற்கதிர் நூலால் சுற்றப்பட்டிருக்கிறது போலத் தோன்றியது. அதைக் கண்ட மாதரசி வியந்து, 'நான் இந்நூலைப் பிரித்தெடுக்க முடியுமானல், அதைக்கொண்டு அழகிய ஆடை நெய்தல் கூடும். நூல், சிக்கல் இல்லா திருப்பதால் அதை யொழுங்காகப் பிரித்தெடுக்க முடியும். ஆனல் எதையும் வழுவின்றிச் செய்வதற்குப் பொறுமை யென்னும் பூஷணம் வேண்டு மன்றோ!' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

பிறகு அப் பெண்மணி மன்னனிடம் சென்று அப் பூச்சியைப் பற்றியும், மின்னலொத்த அந் நூலைப் பற்றியும் எடுத்துச் சொல்லித் தனக்கு ஒரு முசுக்கொட்டை மரத் தோப்புத் தரவேண்டு மென்று கேட்டுப் பெற்றனள். "பொருள்தனைப் போற்றி வாழ்" என்பது போல அப் பெண் அத் தோட்டத்தில் கவனமாய் வேலை செய்து அதைப் பண்படுத்தினள். பட்டுப் பூச்சிகளும் முட்டையிடத் தொடங்கின. அம் முட்டைகளை யெல்லாம் அப் பெண்ணரசி எடுத்து ஒன்று சேர்த்தாள்; அவைகள் பொரித்தவுடனே அப் பூச்சிகளைத் தன் மெல்லிய கரங்களால் எடுத்

தாள்; அவைகளுக்கு உறைவிடம் அமைத்து, உண்பதற்கு இளந் தளிர்களைத் தந்தாள். சில நாட்களில் அப் பூச்சிகள் வளர்ந்து, அதிசயிக்கத் தக்க பட்டுப் பூச்சிகளாகி, கைத்திறனல் அமையாத நூல்நூற்க ஆரம்பித்தன.

பின்னர் ஒரு நாள் அம்மாது ஒவ்வொரு பூச்சியிலும் சுற்றியுள்ள நூல்களை யெல்லாம் எடுத்து,



அவைகளை ஒன்ருய்த் திரித்து, ஒரு நூலாக்கிப் பல நூற்றுக் கணக்கான கெஜங்கள் கொண்டுள்ள நீண்ட பெரிய பந்துபோல் நூலுருண்டையாகச் செய்தாள்; அதைக்கொண்டு அதற்கு முன்னர் எவருங் கண்டிராத ஒளி மிகுந்த ஆடை நெய்தாள்; இன்றும் அது சீனத்தில் 'ஷி' என்றும், ஆங்கிலத்தில் 'சில்க்' என்றும், தமிழில் 'பட்டு' என்றும்

அழைக்கப் படுகிறது. இவ்வாறு பட்டு, சீன தேச முழுவதிலும் பரவிற்று.

அரசி இறப்பதற்குள் சீனத்தின் தென் பகுதி முசுக்கொட்டை மரத் தோப்பாக விளங்கியது மன்றி, ஹேங்-சௌ-பூ என்ற நகரம் பட்டாடைக ளுக்கும், நுண்ணிய சித்திரத் தையல் வேலைகளுக் கும் தனிச் சிறப்புப் பெற்று விளங்கினது. அந்த அரசி அந் நாட்டுத் தேவதைகளில் ஒருத்தியாகக் கருதப்பட்டுப் 'பட்டுப் பூச்சிப் பகவதி' யென்று அழைக்கப் படுகின்றாள்.

இது ஒரு புராணமா யிருந்தாலும், பட்டுநூல் தொழில் சீனத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பரவியிருந்தது என்பதை விளக்குகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சீனர்கள் பட்டு நூல் நூற்று, ஜப்பான், இந்தியா, பாரசீகம் முதலிய நாடு களோடு வாணிபம் செய்து வந்தனர். ஆனால் பட்டு நூலைப் பற்றிய நுட்பங்களைச் சீனர்கள் வெளி விடாது ரகசியமாகவே வைத்திருந்தனர். எனினும், இதன் உண்மையைச் சீனர்களில் கோடிக்கணக் கான மக்கள் அறிந்திருந்தனர். கி. பி. 300-ல் மகா அலெக்ஸாண்டர் தம் யவன வீரர்களோடு ஆசியா வழியாக இந்தியாவிற் புகுந்து மீண்டும் மத்திய தரைக் கடலருகி லுள்ள நாட்டுக்குச் சென்ற பொழுது புத் தம் புதிய பட்டாடையை முதல் தடவையாக ஐரோப் பாவுக்கு எடுத்துச் சென்றார். ஆனால் அவர் பட்டுக்குக் காரணமான பட்டுப் பூச்சிகளை யெடுத்துச் செல்ல

வில்லை. அந்த இரகசியம் கி. பி. 300 வரையிலும் சீனர்களுக்குள்ளேயே சிக்கியிருந்தது.

பின்னர், பட்டு நூற்கும் கிராமத்தி லுள்ள சீனப் பெண்களை ஜப்பானியர் சிறைப்பிடித்துச் சென்றனர். அதே காலத்தில் ஒரு சீன இளவரசி இந்திய மன்னனை மணஞ் செய்துகொண்டு, தன் தலையுடையில் பட்டுப்பூச்சி முட்டைகளை மறைத்து வைத்துக்கொண்டு, தன் கணவனுடன் சென்றாள்; அங்கே தன் குடிகளுக்கு இவ்வரிய கலையைக் கற்றுக்கொடுத்தாள் என்பது தெரியவருகிறது.

இவ்வாறு பட்டு நூற் கலை மெள்ள மெள்ளப் பரவத் தொடங்கியது. கி. பி. ஐந்நூற் றைம்பதாண்டு வரையிலும் பாரசீகம், இந்தியா முதலிய நாடுகளிலிருந்து உரோம ராஜ்யத்திற்கு ஒட்டகங்களில் பட்டு, மூட்டை மூட்டையாகக் கொண்டு போகப்பட்டதென்று சரிதம் சாற்றுகின்றது. ஏராளமான பணச் செலவில் பட்டு வாங்கப்பட்டதால், அரசர்களும் பட்டு அணிவது வீணென்று கருதினர்களென்றால், பட்டின் விலை எவ்வளவு உயர்ந்திருந்ததென்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். கி. பி. ஐந்நூற்று இருபத்தேழிலிருந்து ஐந்நூற்று அறுபத்தேழு வரையிலும் செங்கோல் செலுத்திய ஜஸ்டீனியன் காலத்தே கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் பட்டுப் பூச்சிகொண்டு போகப்பட்டது. ஒரு காலத்தில் ரோமில் வாழ்ந்து வந்த இரண்டு பாரசீகத் துறவிகளை உரோமச் சக்கரவர்த்தி, சீனத்திற்குச் சென்று பட்டுப் பூச்சிகளைக்

கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்தியதால் அவர்கள் திரும்பவும் சீனம் சென்று, தங்களது யாத்திரைக் கோலில் பட்டுப் பூச்சி முட்டைகளை வைத்து மறைத்துக் கொண்டு, இடை வழியில் யாதொரு இடையூறுமின்றித் திரும்பினார்கள். அம் முட்டைகளிலிருந்து உண்டான பூச்சிகள் ஆயிரத் திருநூறாண்டுகளாக மேற்கு நாடுகளுக்கு மேன்மையான பட்டு அளித்தன என்று அறிகிறோம்.

இந் நவமான தொழில் கான்ஸ்டாண்டினோபிளில் இருந்து மெதுவாக ஏனைய நாடுகளுக்கும் பரவலாயிற்று. வெற்றி வீரனாகிய சாரசனால் கீழ் நாடுகளுக்கும் மேனாடுகளுக்கும் இவ்வருமை பெருமை வாய்ந்த தொழில் சென்றது. 'சிசிலி' என்னும் தீவு, பட்டு விவசாயத்திற்கும் உற்பத்திக்கும் தலை சிறந்த இடமாக விளங்கியது. பின்னர் அங்கிருந்து பிளாரன்ஸ், மிலான், வெனிஸ் முதலிய இடங்களில் பரவி, அந்நகரங்கள் வனப்பமைந்த பட்டுத் துணிகளுக்கு ஒப்பற்ற உறைவிடங்களாய் அமைந்தன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பட்டு உற்பத்தி செய்யும் தொழில் பிரான்சு தேசத்தில் தொடங்கிற்று. ஆனால் அவ்வளவு சிறப்பெய்தவில்லை. இக்காலத்தில் தான் பட்டு நூற்கழி இங்கிலாந்து தேசத்திற்குள் இறக்குமதி ஆயிற்று.

### கேள்விகள்

1. பட்டு உண்டாகிய தேசம் எது?
2. பட்டைக் கண்டு பிடித்தவர் யார்?

3. பட்டுப்பூச்சிப் பகவதி யென்று யார், யாரை அழைக்கின்றார்கள்?

4. கி. பி., கி. மு. என்ற சுருக்கெழுத்துக்களை விரித்துக் காட்டு.

## பயிற்சி

1. எதிர்ப்பால் எழுது: இராணி, காதலி, அரசி.

2. அரசனைக் குறிக்கும் இரண்டு சொல்லெழுதுக.

3. ஆண்டு என்ற சொல்லுக்கு மூன்று அர்த்தம் விளங்கும்படியாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

4. இது ஒரு————இருந்தாலும், பட்டு நூல் தொழில் சீனத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பரவியிருந்ததென்று விளங்குகின்றது. 'பழங்கதை' என்பதை வைத்து இவ் வாக்கியத்தை எழுது.

5. தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

6. கா, ன: இந்த இரண்டு எழுத்துக்களில் 'கா' என்ற எழுத்தை முதலில் கொண்டுள்ள ஒரு வார்த்தை சொல்.

'ன' என்ற எழுத்து முதலில் வரும் வார்த்தை இருக்கிறதா?

(கா) என்ற எழுத்திற்கு, காடு என்றும், காலம் என்றும் சொல்லலாம். 'ன' என்ற எழுத்தை முதலில் கொண்ட சொல் வராது. இப்படிச் சில எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வரும்; சில எழுத்துக்கள் வாரா.

பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் எடுத்து, அவைகளை முதலில்கொண்ட சொற்கள் இருந்தால் சொல்.

7. தமிழ் எழுத்துக்களை யெல்லாம் நான்கு வகை யாகப் பிரிக்கலாம். அவை உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து ஆகும். உயிர் எழுத்துக்கள் 12. அவைகளை உச்சரித்துப் பார். அவை களிற் சிலவற்றைக் குறுக்கிச் சொல்லுகின்றோம். சிலவற்றை நீட்டிச் சொல்லுகின்றோம். குறுக்கிச் சொல் லுகின்றவைகளை யெல்லாம் தனியாக எடுத்து எழுது.

அவை அ, இ, உ, எ, ஒ என்பவையாகும்.

இவைகளுக்குக் குற்றெழுத்துக்கள் என்று பெயர். இவை ஐந்தும் போக மீதியிருப்பன ஏழும் நெட்டெழுத் துக்கள். இவைகள் நீட்டி உச்சரிக்கப்படுவதால் நெட் டெழுத்துக்களென்று சொல்லப்படும்.

தனியே உச்சரிக்கப்படாத 18 எழுத்துக்கள் உண்டு. இவை உயிரில்லாத உடம்புகள் போன்று இருப்பதால் மெய்யெழுத்துக்கள் என்று சொல்லப்படும். மெய்யெழுத் துக்களை உயிரெழுத்துக்களோடு சேர்த்து உச்சரித்துப் பார். சிலவற்றை உச்சரிப்பது கடினமாயிருக்கிறது. சில வற்றை உச்சரிப்பது மென்மையாயிருக்கிறது. சிலவற்றை உச்சரிப்பது கடினமுமில்லை, மென்மையுமில்லை.

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு மெய்யெழுத்துக் களையும் உச்சரித்துப்பார். இவை வன்மையாக இருக் கின்றன. ஆதலால் இவைகளுக்கு வல்லினம் என்று பெயர். ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் உச்சரிப் பதற்கு மென்மையாக இருக்கின்றன. ஆகையால் இவை களுக்கு மேல்லினம் என்று பெயர். ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடைத்தரமாக உச்சரிக்கப்படுகின்றன. ஆதலால் இவைகளுக்கு இடையினம் என்று பெயர்.

---

## 3. வறுமை கொடிது

| | | | |
|---|---|---|---|
| சுவீகாரப்புத்திரன் | சிம்மாசனம் | பின்னிட | போஷித்து |
| ஆடையாபரணம் | சிங்கநாதன் | வேந்தன் | ஜீவனம் |
| கடைசிப்பிள்ளை | பவித்திரன் | சத்திரம் | வறுமை |
| குயுக்தி வீரன் | மிடிமித்துரு | திண்ணை | சுகஜீவி |
| பிரத்தியட்சம் | கோரிக்கை | அரியணை | காலன் |
| அலங்கிருதன் | நிவாரணம் | சம்பளம் | நியமம் |
| ஆக்ஷேபணை | தரித்திரம் | சனியன் | குத்தி |
| தமனியபுரம் | ஐயாயிரம் | மலடன் | பிறகு |

கலிநேசன் என்பவன் ஓர் ஏழை; தரித்திரத்தால் துன்புற்று மிக மெலிந்து வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவி மிடிமித்துரு என்பவள் அன்றூடம் நெல் குத்தி, அதனால் கிடைத்த வரும்படியைக் கொண்டு தன் கணவனைப் போஷித்து வந்தாள். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். முதற் குமாரன் பெயர் சிங்கநாதன். இரண்டாம் மகனுடைய பெயர் குயுக்தி வீரன். மூன்றாவது மகனுடைய பெயர் பவித்திரன். இப் பிள்ளைகளையும் கணவனையும் மிடிமித்துரு போஷித்து வருகையில் இன்னும் அதிக வறுமை ஏற்பட்டதால், அதைச் சகிக்கக் கூடாமல் கலிநேசன் தன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே, நாம் இந்த ஊரில் காலந் தள்ள முடியாது. வேறு எந்த ஊருக்காகிலும் சென்று ஜீவனஞ் செய்வோம்" என்று சொல்ல, மனைவி அதற்கு ஒப்புக் கொண்டாள். பின்பு அவர்கள் மூன்று குமாரர்

களையும் அழைத்துக்கொண்டு அருகிலிருந்த தமனிய புரம் சென்றனர்.

அன்றிராத்திரி ஒரு சத்திரத்தில் கலிநேசனும் அவன் மனைவியும் பட்டினியாய்ப் படுத்திருந்தார்கள். அப்போது இவர்கள் தங்கியிருந்த சத்திரத்தின் எதிர்த் திண்ணையில் இரண்டு வழிப்போக்கர்கள் படுத்துக்கொண்டு, "இந்தவூர் வேந்தன் தன் கோரிக்கை நிறைவேறுவதற்காக இந்தவூர்க்



காளிக்கு ஒவ்வொரு வருஷமும் ஓர் ஆண் பிள்ளையைப் பலிகொடுத்து வருகிறானாம். அப்பலிக்கு யாரேனும் ஆண் பிள்ளை கொண்டு வந்து கொடுத்தால் வெகுமதி கொடுக்கின்றானாம்" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

இதைக் கலிநேசன் கேட்டுத் தன் மனையாளைப் பார்த்து, "காதலி, இவ்வூர்க் காவலன் காளிக்கு

ஒவ்வொரு வருஷமும் பலி கொடுப்பது வழக்கமாம். பலிக்காகப் பிள்ளையைக் கொடுப்பவருக்குத் திரண்ட செல்வம் கொடுக்கின்றானும். ஆதலால் நம்முடைய புத்திரர்களில் ஒருவனைக் கொடுத்து, அரசனிடத்தில் மிகுந்த செல்வம் பெற்று, நம்முடைய வாழ்நாளெல்லாம் சுக ஜீவிகளாயிருப்போம்" என்றான். மனைவி, "நாதா, நீங்கள் சொல்லிய பிரகாரம் செய்யலாம். ஆனால் கடைசி மகனாகிய பவித்திரனை மாத்திரம் நான் கொடுக்க மாட்டேன்" என்றாள். கலிநேசனும், "மூத்த மகனாகிய சிங்கநாதனை நான் கொடுக்க மாட்டேன்" என்றான். பின்னர் புருஷனும் மனைவியும் ஒருமித்து நடுமகனைக் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் குயுக்தி வீரன் கேட்டுச் சரேலென்று எழுந்து, பெற்றோர்களின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து, "என் தாய் தந்தையர்களே, உங்கள் யோசனை நல்ல யோசனை. உங்கள் காரியத்தில் நீங்கள் பின்னிட வேண்டாம். நினைத்த பிரகாரம் செய்வதால் அரசனுடைய பிரார்த்தனையும் நிறைவேறும். உங்களுடைய தரித்திரமும் நிவாரணமாகும். நான் காளிக்குப் பிரீதியாகின்றேன்; ஆறிலும் சாவு, நூறிலும் சாவு; ஆதலால் ஆக்ஷேபணையின்றி நீங்கள் நினைத்தபடியே செய்யுங்கள்" என்றான்.

மறுநாள் அப்பெற்றோர்கள் குயுக்தி வீரனைக் கூட்டிக்கொண்டு அரசனிடஞ் சென்று, "அரசே, இப் பிள்ளையை நாங்கள் விற்று விடுகின்றோம்"

என்று சொல்ல, அரசன், "இவனுக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று கேட்க, அவர்கள் "ஐயாயிரம் வராகன்" என்று கூறினார்கள். அரசன் அப்பணத்தைக் கொடுத்து, அப் பையனைப் பெற்றுப் போஷித்து வந்தான். பலியிடுங் காலம் வரையிலும் பலியிடப்படுகின்ற பிள்ளை விரும்பிய வற்றை யெல்லாம் அரசன் அளிக்க வேண்டு



மென்ற நியமம் இருந்தபடியால், அக் குயுக்திவீரன் அரசனைப் பார்த்து, "மண்டலாதிப, தங்கள் அரியணையில் நான் உட்கார்ந்து, சிறிதுநேரம் அரசாட்சி செய்ய அனுக்கிரகம் பண்ண வேண்டும்" என்றான். அதற்கு அரசன் ஒப்புக்கொண்டு, தன் அரியணையை அவனுக்களித்தான்.

குயுக்தி வீரன், தனக்குக் கிடைத்த அக் கொஞ்ச நேரத்தில் தன்னாட்சியிலுள்ள சிப்பந்திகள்

யாவர்க்கும் உள்ள சம்பளத்தை உயர்த்தினன். தீர்வையைக் குறைத்தான்; இவ்வாறு பல நன்மைகளைச் செய்து முடித்த பிறகு, சிம்மாசனத்தை விட்டு இறங்கி வந்தான். கொஞ்ச நேரத்தில் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. பலி கொடுக்கும் நாள் வந்தது. அன்று அதிகாலையில் குயுக்தி வீரனை நீராட்டுவித்து, ஆடை யாபரண அலங்கிருதனக்கி, மந்திரி, பிரதானி முதலிய பரிசனங்கள் புடை சூழ,




அரசன் அவனை அழைத்துக் கொண்டு போய்க் காளியின் எதிரில் நிறுத்தினன். அவனை வெட்டுவதற்கு வாளாயுதத்தைக் கையில் ஏந்தி அரசனும் தயாராக நின்ருன். அப்பொழுது குயுக்தி வீரன் காளியைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தான். அதைக் கண்டு காளி முகமலர்ச்சியுடன் பிரத்தியட்சமாகி, "மகனே, எதற்காக நீ சிரித்தாய்?" என்று கேட்டாள். அதற்கு அவன், "தாயே, தந்தை அடித்தால்

தாய் அணைப்பதும், தாய் அடித்தால் தந்தை அணைப்பதும், அவ்விருவர்களும் அடித்தால் அரசன் காப்பாற்றுவதும், அரசன் பகைத்தால் தெய்வம் ஆதரிப்பதும் வழக்கம். அதற்கு முரணாக என் தாயும் எனக்குச் சனியனானாள்; என் தந்தையும் எனக்குச் சத்துருவாயினான்; அரசனோ எனக்குக் காலனானான்; நீயோ என் இரத்தத்தைக் குடிப்பதற்கு எதிர் நிற்கின்றாய்; எனக்குப் புகலிடமாயுள்ள எல்லோரும் எனக்குப் பகைவர்களானார்கள். இதைவிட ஆச்சரியம் வேறு என்ன இருக்கின்றதென்று நான் சிரித்தேன்" என்றான்.

அதைக் கேட்ட காளி வெட்கப்பட்டு, தனக்கு இனிமேல் பலியே வேண்டாமென்று நிறுத்தி, அரசனுடைய விண்ணப்பத்தை நிறைவேற்றிவிட்டாள். அரசன் மலடன் ஆனதால், தான் குயுத்தி வீரனைச் சுவீகாரப் புத்திரனாக ஏற்றுக் கொண்டு அவனுக்கு அரசாட்சியைக் கொடுத்தான். குயுக்தி வீரன் தன் பெற்றோர்களோடும் சகோதரர்களோடும் சுகமாக வாழ்ந்து வந்தான்.

## கேள்விகள்

1. தாய் தந்தையர்கள் நடு மகனை ஏன் விற்றனர்?
2. பெற்றோர்கள் பேச்சைக் கேட்ட குயுக்தி வீரன் சொல்லியதென்ன?
3. சத்திரத் திண்ணையிலிருந்த இருவர் என்ன பேசினர்?
4. குயுக்தி வீரன் காளியை நோக்கி ஏன் சிரித்தான்?

## பயிற்சி

1. எதிர்ப்பதம் எழுது: அருகில், பகை, சத்துரு,பிரீதி.

2. விளக்கிச் சொல்லு: ஆடை யாபரண அலங்கிருதன், பரிசனங்கள், சனியன், மலடன்.

3. பிரித்தெழுது: ஞானோபதேசம், ஜீவித்திருக்கையில்.

4. கண்டது, கேட்டது, நினைத்தாய், போகின்றான்: இச்சொற்களுக்குத் தொழிற் பெயர்கள் சொல்.

5. 'க' என்னும் எழுத்து எப்படி உண்டாயிற்று? க் என்ற எழுத்தோடு அ என்னும் எழுத்தைச் சேர்க்க, (க்+அ=க) க என்னும் எழுத்துத் தோன்றியது. இப்படி உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்து வரும் எழுத்திற்கு உயிர் மெய் யெழுத்து என்று பெயர்.

அப்படியானால் உயிர் மெய்யெழுத்துக்கள் எத்தனை?

மொழிக்கு முதலில் பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் மாத்திரம் வருவதன்றி, உயிர்மெய் யெழுத்துக்களாகிய க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங, என்ற பத்து எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும். ய என்னும் எழுத்தை முதலில் கொண்டுள்ள ஒரு சொல் சொல்லு.

பெயர்ச் சொற்கள் ஆறுவகைப்படும்:—

| | | |
|---|---|---|
| 1. | பொருட் பெயர் | கத்தி |
| 2. | இடப் பெயர் | உறையூர் |
| 3. | காலப் பெயர் | நாள் |
| 4. | சினைப் பெயர் | கண் |
| 5. | பண்புப் பெயர் | வெண்மை |
| 6. | தொழிற் பெயர் | படித்தல் |

## 4. கார் விபத்து

| | | | |
|---|---|---|---|
| அமர்த்திக்கொண்டு | விசாரணை | பாக்கம் | ரஸ்தா |
| தலைமறைவாக | அடிவயிறு | நாடகம் | மோது |
| அபாயகரமான | சகோதரி | கோரம் | கப்பி |
| கலோனியல் | சிகிச்சை | பீப்பாய் | குவி |
| திரும்புகை | குடும்பம் | விபத்து | தார் |
| பிரக்ஞை | கூச்சல் | டாக்சி | கதி |

### கார் விபத்தில் சிக்கிய குடும்பம்

**ஒரு டாக்டர் பரிதாப மரணம்**

**நாடகம் பார்த்துத் திரும்புகையில் நேர்ந்த கதி**

*நமது நிருபர்*

புதுச்சேரி, செப்டம்பர்—29

இன்று விடியற்காலை கிரியம் பாக்கத்திற் கருகிலுள்ள புதுச்சேரி கடலூர் ரஸ்தாவில் ஒரு கோரக் கார் விபத்து ஏற்பட்டது. கடலூரிலிருந்து ஏழு பேர்கள் உள்ள குடும்பத்தார், புதுவைக்கு வந்து கொண்டிருந்தார்கள். டாக்டர் டெலாமோர் என்பவர் ரிட்டயர்டு டாக்டர். அவருக்கு வயது 65. அவரும் அவருடைய பெண்கள் இருவரும் இரண்டு பிள்ளைகளும் சகோதரியும் மாப்பிள்ளையும் புதுவையில் இருந்து கடலூருக்குப் போனார்கள். அங்கு நாடகம் பார்ப்பதற்காக ஒரு டாக்சியை அமர்த்திக்கொண்டு அவர்கள் போயிருந்தார்கள். இன்று விடியற்காலை மூன்று மணி சுமாருக்கு அவர்கள் காரில் ஏறிக் கொண்டு புறப்பட்டார்கள். கார், கிரியம் பாக்கத்

திற்கு வந்துகொண்டிருந்த பொழுது ரஸ்தா ஓரத்தில் வைத்திருந்த தார்ப்பீப்பாயில் மோதியதாம். இதனல் அந்தப் பீப்பாய் உடைந்த் தென்றும் மற்ருெரு பீப்பாயிலும் கார் மோதிய தென்றும் பிறகு கார் ரஸ்தாவில் வலது புறத்தில் குவிக்கப்பட்டிருந்த கப்பிக் குவியலில் மோதிய தென்றும் சொல்லுகிருர் கள். டாக்டர் டெலாமோர் வண்டியிலிருந்து வெளி யில் தூக்கி எறியப்பட்டுக் காரில் கால் வைத்து ஏறும் பலகைக் கிடையில் சிக்கிக்கொண்டார்.

இது காரணமாக அவருக்கு அபாயகரமான காயங்கள் ஏற்பட்டன. நெற்றியிலும் அடிவயிற்றி லும் அவருக்குப் பலமான காயங்கள் உண்டாயின. டாக்டரின் பிள்ளை டாக்டர் சாந்துக்குப் பல் உடைந்துவிட்டதாம். டாக்டரின் பெண்களில் ஒரு பெண் தவிர மற்றெல்லாருக்கும் காயங்கள் ஏற்பட் டன. எல்லோரும் பிரக்ஞை யிழந்த நிலைமையில் இருக்கின்றனர். இந்தக் கோர விபத்தைக் கண்டு டிரைவர் திகிலடைந்து போய்விட்டார். அவர் விபத்து நடந்த இடத்திலிருந்து எங்கோ தலைமறைவாகப் போய்விட்டா ரெனக் கூறுகின்றனர்.

நாடகம் பார்க்கப் புதுவையிலிருந்து சென்றி ருந்த இன்னெரு கார் திரும்பவும் புதுவையை நோக்கிப் பின்னல் வந்தது. காயமடையாது தப்பிய டாக்டரது பெண் கூச்சல் போட்டதைக் கேட்டு அந்தக் கார் நிறுத்தப்பட்டது. அந்தக் காரில் இருந்தவர்கள் மேற்படி இடத்திலே இறக்கிவிடப்

பட்டனர். காயமுற்றவர்கள் புதுவைக் கலோனியல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர். வைத்திய சிகிச்சை யளிக்கப்படு முன்பாக டாக்டர் டெலா மோர் இறந்துவிட்டார். மற்றவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். போலீஸ் விசாரணை நடந்து வருகிறது.

[1939-ஆம் அக்டோபர் மீ 3-உ செவ்வாய்க்கிழமை சுதேச மித்திரன் தினசரிப் பத்திரிகையில் வந்த சமாச்சாரம்]

## கேள்விகள்

1. கார் விபத்து ஏற்பட்டது எங்கே ?
2. காரில் இருந்தவர்கள் யார் ?
3. டெலாமோருக்கு என்ன வயதிருக்கும் ?
4. காலை எத்தனை மணிக்கு எவ்வாறு விபத்து ஏற்பட்டது ?
5. யார் யாருக்கு என்னென்ன காயங்கள் பட்டன?
6. விபத்துக் குள்ளானவர்களுக் குதவி செய்தவர்கள் யார் ?
7. இச் சம்பவத்தைச் சுருக்கமாக எழுது.
8. நமது நிருபர் என்றால் என்ன ?

## பயிற்சி

1. நீ சிறந்த வள்ளல் என்று பட்சிகளால் கேள்விப் படுவதனாலும், அனுபவசாலிகளான வித்வான்களிடம் தருமோபதேசம் கேட்கவேண்டுமென்று சாஸ்திரம் இருப்பதனாலும் நான் உன்னிடத்திற்கு வந்தேன்; இவ் வாக்கியத்தை மூன்று தனி வாக்கியங்களாகப் பிரித் தெழுது.

## 5. தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தான

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்தது அனைத்து மளந்திடு
வண் மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையக மே.

6. தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே.

7. வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழிய வே.

ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதி.

## 6 நம்பிக்கை மோசம்

| | | | |
|---|---|---|---|
| ருத்திராட்சப் பூனை | வைராக்கியம் | பக்ஷித்து | ஊன் |
| நெடுஞ் செவியன் | அனுபவசாலி | நடத்தை | இத்தி |
| பூசிக்கின்றார்கள் | மறச்செயல் | வள்ளல் | அறம் |
| நித்திய ஸ்நானம் | சமர்த்தன் | பாதகம் | அதிதி |
| தருமோபதேசம் | முடிவை | சத்துரு | நீசன் |
| கந்தமூலாதிகள் | சோதிக்க | எலும்பு | சாது |
| தலைப்பட்டது | சிவசிவா | பொந்து | |

ஒரு இத்தி மரத்தின் பொந்தில் நகமும் கண்ணுமில்லாத ஒரு கழுகு வாசஞ் செய்துகொண்டிருந்தது. ஏனைய பறவைகள் இரை தேடிக்கொண்டு வந்து கொடுக்க, அதைத் தின்று அக்கழுகு ஜீவித்திருந்தது. ஒரு பூனை அங்குள்ள பறவைகளினுடைய குஞ்சுகளைத் தின்ன வந்தது. பறவைக் குஞ்சுகள் அதைக் கண்டு பயந்து பெருங் கூச்சலிட்டன. அக் கிழக் கழுகு அதைக்கேட்டு, "குஞ்சுகளே, ஏன் பயப்படுகின்றீர்கள்? இங்கே யார் வந்தது?" எனக் கேட்டது. இதற்குள் பூனை கழுகைப் பார்த்துவிட்டது. அதனுடலைப் பார்த்துப் பயந்து, பின் ஒருவாறு தைரியம் பண்ணிக் கொண்டு, 'இந்தப் பகைவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு போவதற்கு நமக்குச் சக்தி யில்லை; ஆதலால் இவன் சமீபத்தில் செல்ல வேண்டும்; இனி நடப்பது நடக்கட்டும்' என்று கழுகின் அருகில் போய், "சமர்த்தனே, உனக்கு வணக்கம்" என்றது. கழுகு அதைக் கேட்டு, "நீ யார்?" என, பூனை, "என் பெயர் நெடுஞ்செவியன்" என்

றது. பின்னர் கழுகு, "நீ விரைந்து இவ்விடம் விட்டுச் செல். இல்லாவிட்டால் உன் உயிருக்கு முடிவைத் தேடிக் கொள்வாய்" என்று சொல்ல, பூனை தன் விருத்தாந்தத்தைச் சொல்லலுற்றது.

"சாதி பேதத்தினாலே பிராணிகளைக் கொல்வது நியாய மன்று. அவனவன் நடத்தையைப் பார்த்துச் செய்ய வேண்டியது எதுவோ அதைச் செய்யவேண்டும்" என்று சொல்ல, கழுகு அதைக்கேட்டு "நீ ஏன் வந்தாய் ?" என, பூனை, "நான் கங்கை யாற்றில் நித்திய ஸ்நானம் பண்ணி அநேக விரதங்களை அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறேன். நீ சிறந்த வள்ளல் என்று பட்சிகளால் கேள்விப்படுவதனாலும், அனுபவசாலிகளான வித்வான்களிடம் தருமோபதேசம் கேட்க வேண்டுமென்று சாஸ்திரம் இருப்பதனாலும் யான் உன்னிடத்திற்கு வந்தேன். நீ அறத்தை நினையாது மறச்செயல் புரிய நினைத்தாய். சத்துரு, வீட்டிற்கு வந்தாலும் சாதுக்கள் அவனுக்குச் சன்மானம் பண்ணுவார்கள்; மரம் தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல் தருகிறது; சாதுக்கள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களைப் பூசிக்கின்றார்கள். அதிதி, யார் வீட்டிற்கு வந்து முகம் வாடிப்போகின்றானோ அவன் அந்த வீட்டுத் தலைவனுக்குத் தன் பாபத்தைக் கொடுத்துவிட்டுப் புண்ணியத்தை யடைந்து போகிறான். ஆதலால் புண்ணியவான்கள், தம் வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களைப் போற்றுகின்றனர். சந்திரன் நீசன் வீட்டிலும் பிரகாசிக்

கிறான்" என்று சொல்ல, அதைக் கேட்டுக் கழுகு, "பூனை ஊனைத் தின்னுகின்றது; கொலை செய்வதற்கு அஞ்சுவதில்லை. ஆதலால் நான் அவ்வாறு சொன்னேன்" என்று கழுகு சொல்ல, பூனை தனது இரண்டு கன்னத்திலும் அடித்துக் கொண்டு, காதின் மேல் கைகளை வைத்து "சிவ சிவா! நான் பல சாஸ்



திரங்களைக் கேட்டுப் பெரும் வைராக்கியம் கொண்டு, தீய கருமங்களை யெல்லாம் விட்டு விட்டேன். கொலை செய்வதைப் போல் பெரும் பாதகம் உலகத்தில் வேறொன்று மில்லை. இப்படிக் கொலை செய்கிறவர்கள் நரகத்தை யடைவார்கள். ஆதலால் தான் முனி

வர்கள் காட்டில் இருந்து கடுந் தவம் புரிந்து கந்த மூலாதிகளைச் சாப்பிடுகின்றார்கள். இவர்கள் எப்படிப் பாதகம் பண்ணுவார்கள்?" என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கை வரும்படி ஞானோபதேசம் செய்தது.

பிறகு அந்த ருத்திராட்சப் பூனை பறவைகளின் குஞ்சுகளைக் கொண்டுவந்து தின்னத் தலைப்பட்டது. தாய்ப்பறவைகளெல்லாம் கிலேசமுற்றுத் தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத் தொடங்கின. இதையறிந்த பூனை அவ்விடம் விட்டு வேறிடத்துக்குப் போய் விட்டது. தாய்ப் பறவைகள் அங்கங்கே பார்த்துக் கொண்டே கழுகண்டை வந்தன; அங்கே குஞ்சு களின் எலும்புகளும் சிறகுகளும் கிடக்கக் கண்டு, "நமது குஞ்சுகளை இந்தக் கழுகே பக்ஷித்துவிட்டது" என்று முடிவு பண்ணி, அக்கழுகைக் கொத்திக் கொன்று விட்டன. ஆதலால் ஒருவனுடைய குணம் தெரியாமல் அவனுக்கு இடங்கொடுக்கலாகாது.

## கேள்விகள்

1. எப்படிப்பட்ட கழுகு குஞ்சுகளுக்குக் காவலிருந்தது?

2. பூனை தன்னை நம்பும்படி எவ்வாறு கழுகிடம் சொல்லியது?

3. உலகத்தில் எத்தொழில் பெரும் பாதகமாகும்?

4. பறவைகள் கழுகைக் கொல்லக் காரணமென்ன?

## 7. காப்பி

| | | | |
|---|---|---|---|
| கோத்துக் கோத்தாய் | பால்போளி | பயக்கும் | கன்று |
| உஷ்ணப் பிரதேசம் | ஓமப்பொடி | பட்டம் | அஃது |
| இங்கிலீஷ்பாஷை | பால் காப்பி | இட்டலி | மேனி |
| உயிர் வாழ்க்கை | காராப்பூந்தி | கம்பளம் | அக்பர் |
| காப்பிப்பானம் | அபிசீனியர் | உப்புமா | தினுசு |
| உருளைக்கிழங்கு | போண்டா | நுணுக்க | கேசரி |
| மைசூர்ராஜ்ஜியம் | சிற்றுண்டி | தோசை | பஜார் |
| அராபி பாஷை | இலங்கை | தெள்ளி | சாரல் |
| காரப்பொருள் | அபரிமிதம் | வறுவல் | தளம் |
| வெறுங்காப்பி | கரிநெருப்பு | மலர்ந்த | களம் |
| சுருள்போளி | அரேபியா | அல்வா | தேநீர் |
| குலாப்ஜான் | வாயிலாக | ஊட்டி | பருகி |
| மலையடிவாரம் | துருக்கியர் | சிலேபி | பூரி |
| அடைமழை | நேர்முகம் | பிறப்பு | |
| ஹோட்டல் | முற்பகுதி | அராபி | |

காலையில் காப்பிப்பானம் பண்ணுவது நமக்கு வழக்கமாகி விட்டது. நமது நாட்டிலுள்ள நகரங்களில் ஒவ்வொரு பஜாரிலும் காப்பி ஹோட்டல்கள் காணப்படுகின்றன. அங்குப் பலரும் கூட்டமாய்ச் சென்று, சிற்றுண்டி அருந்தி உரையாடிக்கொண்டிருப்பார்கள். சில வீடுகளில் காப்பிப் பானத்தை வீட்டிலுள்ளவர்களே தயார் பண்ணிக்கொள்வார்கள். ஆனால், காப்பிப் பானம் நமது உயிர் வாழ்க்கைக்கு அவசியமல்ல.

முதன் முதலில் அபிசீனியர்களே காப்பிப் பானம் பருகி வந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில்,

இவ் வழக்கம் அரேபியா தேசத்தில் பரவினது. அரேபியர் வாயிலாய் மகமதியர்கள் எங்கெங்குச் சென்றார்களோ அங்கங்கெல்லாம் இவ்வழக்கம் பரவியது. 'காப்பி' என்ற சொல்லை இங்கிலீஷ் பாஷையாகக் கொண்டாலும் இச்சொல் அராபி பாஷையைச் சேர்ந்தது. ஆனால், அரேபியர்கள் பெயரையும் பெயரைக்கொண்ட பொருளையும் நேர்முகமாக இங்கிலாந்திற்குக் கொண்டு வரவில்லை. துருக்கியர்கள் தென்கிழக்கு ஐரோப்பாவை




ஆண்டு வந்தனர். அவர்கள் இச்சொல்லையும் பொருளையும் அரேபியர்களிடத்திலிருந்து பெற்றனர். ஆதலால் அதிலிருந்து ஐரோப்பாக் கண்டமுழுவதும் பரவிற்று. அக்பர் சக்கரவர்த்தி சாகும்பொழுது அதாவது 17-வது நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்து தேசத்தில் இவ்வழக்கம் பரவியது.

காப்பி ஹோட்டல்களில் காப்பி மாத்திரம் விற்கிறதில்லை. தேநீரும் பலகாரங்களும் விற்கப்படுகின்றன. கேசரி, அல்வா, குலாப்ஜான், உப்புமா, பூரி, உருளைக்கிழங்கு, சிலேபி, பால்போளி, சுருள்

போளி, போண்டா, இட்டலி, தோசை, வறுவல், காராப்பூந்தி, ஓமப்பொடி முதலியனவும், இன்னும் பல தினுசான காரப் பொருள்களும் காப்பி ஹோட்டல்களில் கிடைக்கும்.

காப்பி இந்தியாவில் பயன் படுகிறதாயிருந்தாலும் ஏராளமாகப் பயிரிடப்பட்டாலும் அது நம் நாட்டின் பொருளல்ல; சுமார் மூந்நூறு ஆண்டுகளாகத் தான் நம் நாட்டில் பயிரிடப்படுகின்றது. முதன் முதலாக மகமதியர்களால் கொண்டுவரப் பட்டு, அவர்களாலே மைசூர் ராஜ்ஜியத்தில் பயிரிடப்பட்டது. இன்று மைசூர் ராஜ்ஜியத்தில் ஏராளமான பிரதேசங்களில் காப்பிச் செடியைக் காணலாம். ஒரு சமயத்தில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் காப்பிச் செடி அபரிமிதமாகப் பயிரிடப்பட்டது. ஆனல் ஒரு கொடிய நோய் வந்து காப்பிப் பயிர்த்தொழிலை அழித்துவிட்டது. ஆதலால் காப்பிக்குப் பதிலாகத் தேயிலையைப் பயிரிட மக்கள் ஆரம்பித்தனர்.

காப்பி உஷ்ணப் பிரதேசத்தில்தான் செழிப்பாய் வளரும். வேண்டிய அளவு அதிக உஷ்ணமில்லாத நாடுகளில் அப்பயிர்த் தொழில் சித்திக்காது. நல்ல மழையுள்ள மலை யடிவாரங்களிலும், நிழலுள்ள மலைப் பிரதேசங்களிலும் காடுகளிலும் காப்பி நன்ருய் வளரும். அதன் வேர் நன்ருக ஊன்றுவதற்கு ஆழமும் குளிர்ச்சியுமுள்ள மண் வேண்டும். காப்பிச்செடி பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.

ஆனல், அச் செடிகளுக்காக அடர்த்தியா யிருக்கின்ற மரங்களை யெல்லாம் வெட்ட வேண்டிவரும். ஏனெனில் காப்பிச் செடிக்கு அதிக நிழல் ஆகாது. ஆதலால் காப்பித் தோட்டங்களில் அங்குமிங்கும் மரங்கள் காணப்படுகின்றன. காடுகளிலுள்ள எல்லா மரங்களையும் வெட்டி நிழல் கொடுக்கும் மரங்களை வைத்து உண்டாக்குவார்கள்.

காடுகள் வெட்டப்பட்டபின் நிலத்தின் அடிப்பாகத்தில் தீயிடுவார்கள். அதனலால் விஷக்கிருமிகள் முதலியன அழிந்துபோம். சிறு காப்பிச் செடிகளைப் பிரம்புக் கூடையில் நட்டு வளர்ப்பார்கள். அவைகள் சிறிய கன்றுகளானவுடனே பிடுங்கப்பட்டு வேறிடத்தில் நடப்படுகின்றன. காப்பிச் செடி பெரிதாகிப் பலன் கொடுப்பதற்குச் சில ஆண்டுகள் செல்லும். அஃதும் நிச்சயமாய்ப் பலன் கொடுக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஒரு வேளை நல்ல அறுவடை கிடைக்கலாம். ஒரு வருஷத்தில் சுமாரான பலன் கிடைக்கலாம். சில காலத்தில் பலன் இல்லாமலிருக்கலாம். காப்பித் தோட்டக்காரன் மழையை நம்பியே பலனை எதிர்பார்ப்பான். அவன் வேரினைச் சுற்றி மண்ணைக் கிளறிக் களை யெடுத்து, செடியை வளர்க்கின்றான் எனினும், மழை, பட்டத்தில் பெய்யாவிட்டால் முழுமேனி காண முடியாது.

காப்பிச் செடியின் கிளைகளில் இரண்டு இலை பிரிகின்ற காம்புகளில் காப்பிப் பழம் கொத்துக் கொத்தாய் உண்டாகும். முதன் முதலில் மலர்கள்

தோன்றுகின்றன. சிறிய மொட்டுகள் வளர்வதற்கு நல்ல மழையாவது சாரலாவது பெய்யவேண்டும். இன்னும் இரண்டு மூன்று மழை, மலர்களைப் பெருகச் செய்யும். பின்னர் ஒரு அடைமழை அவைகளை விரியும்படி செய்யும். மொட்டுகள் மலர்ந்த பிறகு மழை வேண்டியதில்லை. ஆனல் அக் காலத்தில் சூரியனுடைய வெளிச்சம் வேண்டும். அப் பொழுதுதான் சிறு காய்கள் தோன்றும்.

காப்பிச் செடிகள் எல்லாம் ஒரே காலத்தில் பூக்க ஆரம்பிக்கின்றன். மலையினுச்சியில் நின்று கொண்டு அடிவாரத்தை நோக்குவோமானல் அவை வெண் கம்பளம் விரித்ததுபோல் தோன்றும்; அது ஒரு பெருங் காட்சியாகவே இருக்கும். அம்மலர்களிலிருந்து உண்டாகும் நறுமணம் ஆகாயமெங்கும் பரவியிருக்கும்.

பின்னர் காய்கள் பெரியவை யாகின்றன. காய்கள் பெருக்க மழை அவசியம். ஆறு திங்களான பிறகு காய்கள் சிவப்பு நிறத்தை யடைகின்றன. அக்காலமே காப்பிக் கொட்டை பறிக்கத் தகுந்த காலமாகும்.

நூற்றுக் கணக்கான ஏழை மக்கள் தங்கள் கிராமங்களை விட்டுத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். இவ்வறுவடை முடிந்த பின்னர் தாங்கள் சம்பாதித்த பணத்தைக் கைக்கொண்டு தமது கிராமங்களுக்குச் செல்லுகின்றனர். அவ்வாறு சென்றவர்கள் அடுத்த அறுப்புக் காலம் வரையிலும் காத்திருப்

பார்கள். ஒரு காப்பிப் பழத்தில் இரண்டு பருப்புகள் சேர்ந்திருக்கும். பருப்பின் மீது சதை மூடியிருக்கும். நமக்குப் பருப்பு வேண்டியதால் சதையைப் பிய்க்க வேண்டும்; இவ்வாறு பருப்பை யெடுப்பதற்குப் பழம் வெய்யலில் காயவேண்டும். செம்மண்ணுல் தளமிட்ட கடினமான களத்தில் அவைகள் காய வைக்கப் படுகின்றன. சூரிய உஷ்ணத்தால் அப்பழங்கள் உலர்கின்றன. பின்னர் பருப்பு எளிதில் எடுக்கப் படுகின்றன. அப் பருப்பை இரண்டு தோல்கள் மூடியிருக்கின்றன. அவைகளையும் உரித்த பின்னரே பருப்பு பல்விடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவைகளை உடனே காப்பிப் பானம் பண்ண முடியாது. காப்பிக் கொட்டைகளைச் செவ்வறுவலாக வறுக்கவேண்டும். அதற்குச் சிலர் சில யந்திரங்களை உபயோகிக்கின்றார்கள். கொட்டைகளில் சிறிது வெண்ணெய் தடவிக் கரி நெருப்பில் வறுப்பது எளிதான காரியம்.

கொட்டைகள் செவ்வறுவலாகவே யிருக்க வேண்டும். கருகிவிடக் கூடாது. கருகினுல் அவை ருசியா யிரா. பின் அவைகளை இடித்துத் தெள்ளிப் பொடியாக்க வேண்டும். சிலர் அவற்றை உரலிலிட்டு நுணுக்குவார்கள். இவ்வாறு நுணுக்குவதற்கு யந்திரங்கள் இருக்கின்றன. அதன் பின்னரே அவை உபயோகத்திற்குத் தயாராகின்றன.

காப்பிக் கொட்டைகளைத் தினந்தோறும் வறுத்து இடித்துத் தூளாக்குவதே சிறந்ததாகக்

கருதப்படுகின்றது. இவ்வாறு செய்வதால் அக் கொட்டைகள் வாசனையையும் நல்ல ருசியையுங் கொண்டிருக்கும். காப்பிப் பானம் பல வழிகளிலே தயார் பண்ணப் படுகின்றது. பாலும் சர்க்கரையும் அவசியமான பொருள். பால் சேர்க்காத காப்பி வெறுங் காப்பி யென்று சொல்லப்படும். பால் கலந்த காப்பி, பால் காப்பி யென்று சொல்லப்படுகிறது.

## கேள்விகள்

1. முதலில் காப்பிப்பானம் பருகியவர்கள் எந்தத் தேசத்தார்?
2. காப்பி பருகுவதை நாடெங்கும் பரப்பினவர்கள் யார்?
3. காப்பி ஹோட்டலில் என்னென்ன விற்கப்படும்?
4. காப்பிச் செடி எங்கே செழிப்பாக வளரும்?

## பயிற்சி

1. பஜார், ஹோட்டல், அபரிமிதம்: இவைகளுக்கு அர்த்தம் என்ன?

2. உரை, ஆண்டு, மேனி, திங்கள்: ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் எழுது.

3. அரேபியர், சக்கரவர்த்தி, மலை, தோட்டக்காரன், கம்பளம்: இவைகள் இன்ன பால் என்று கூறு.

4. தடித்த எழுத்தில் உள்ளசொற்களுக்குப் பதிலாக வேறு வார்த்தைகளை அமைத்தெழுது:—

(i) ஒவ்வொரு **பஜாரிலும்** காப்பி ஹோட்டல் காணப் படும்.

(ii) **அத்தனலால்** விஷக் கிருமிகள் இறந்துவிடும்.

5. வீடு: இது ஒரு வீட்டைக் குறிக்கின்ற சொல். ஆதலால் ஒருமை எண். வீடுகள்: இது பல வீடுகளைக் குறிக்கின்ற சொல். ஆதலால் பன்மை எண்.

நரி, நரிகள், விலங்குகள், மிருகம், மக்கள்: இவைகளில் உள்ள ஒருமை பன்மைகளை எடுத்துச் சொல்லுக.

6. ஐந்து பால்களில் ஆண் பால், பெண் பால், ஒன்றன் பால், ஆகிய மூன்றும் ஒருமை எண்ணையே குறிக்கும். பலர் பால், பலவின் பால் என்ற இரண்டும் பன்மை எண்ணையே குறிக்கும்.

நாடு, உயிர், சொல், செடி, பிரதேசம், கம்பளம், ஆண்டு: இவைகளுக்குப் பன்மைப் பெயர்கள் சொல்லுக.

7. முருகன் கதறுகிறான், கன்று கதறுகிறது. இவ்வாக்கியங்களை நன்றாய்ப் படித்துப் பார். முருகன் கதறுகிறது என்று நாம் சொல்வதில்லை. கன்று கதறுகிறான் என்றும் சொல்வதில்லை. ஏனென்றால் மனிதன் வேறு, கன்று வேறு. முருகன் என்ற சொல் உயர் திணைப் பெயர்ச் சொல். கன்று என்பது மிருக இனத்தைச் சேர்ந்தது. அறிவில்லாதது. ஆதலால் அஃறிணைப் பெயர்ச் சொல்லாகும். மக்கள், தேவர், நரகர் முதலிய மூன்று வகுப்பினரும் உயர்திணையைச் சேர்ந்தவர்கள். மற்றும் உயிருள்ளவும் உயிரில்லாதனவுமான பெயர்ச் சொற்களெல்லாம் அஃறிணையைச் சேர்ந்தன.

இப்பாடத்திலுள்ள அஃறிணைப் பெயர்களை எழுது.

8. நாள், மதுரை, பாண்டியன், இரவு, கை, ஆசனம்: இவைகள் இன்னின்ன பெயர்ச் சொற்கள் என்று சொல்.

## 8. உரையாடல்

| | | | |
|---|---|---|---|
| முதலாவது வகுப்பு | சிற்றுண்டிச்சாலை | ஸ்டேஷன் | டிக்கேட் |
| ரயில்வே கம்பெனி | செங்கோட்டை | சூட் கேஸ் | லக்கேஜ் |
| ரிஜிஸ்தர் புத்தகம் | மெயில் வண்டி | போர்ட்டர் | ஜட்கா |
| கம்பார்ட்மெண்ட் | காலிபேர்த் | | |

**முருகன்** ஒரு பிரயாணி. அவன் இன்றிரவு மெயில் வண்டியில் மதராஸிலிருந்து செங்கோட்டை போகின்றான். அவன் ஒரு ஜட்காவிலிருந்து தன்



சூட்கேஸோடும், படுக்கையோடும் இறங்கினான்; ஸ்டேஷனுள்ளே செல்லும்போது ஒரு போர்ட்டரைக் கண்டான்.

**முருகன்:—** போர்ட்டர், டிக்கெட் கொடுக்கும் அறை எது ?

**போர்ட்டர்:—** ஐயா, இந்தப் பிளாட்பாரத்தில் சிறிது தூரஞ் சென்று வலது புறமாகத் திரும்புவீர்

களானல் டிக்கெட் அறையைக் காணலாம். தங்களிடம் ஏதாவது சாமான் இருக்கிறதா ?

**முரு:**—இந்தப் பெட்டியும் படுக்கையுந்தான்.

**போ:**—நீங்கள் எந்த வகுப்பில் பிரயாணம் செய்யப் போகின்றீர்களையா ?

**முரு:**—நான் முதலாவது வகுப்பில் பிரயாணம் செய்யப் போகின்றேன். இந்தப் பெட்டியை நானிருக்கும் இடத்திலேயே வைத்துக்கொள்ளலாமா ?

**போ:**—அது கனமில்லாததால் உங்கள் பக்கத்திலேயே வைத்துக்கொள்ளலாம். நான் சாமான்களை எடுத்துக்கொண்டு வரலாமா ?

**முரு:**—சரி, எடுத்துக்கொண்டு வா.

(முருகன் டிக்கெட் தரும் ஜன்னலுக்குப் பிளாட்பாரத்தின் வழியாகப் போகின்முன். டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தா எதிரே வருகின்ருர்.)

**குமாஸ்தா:**—எந்த ஊருக்கு டிக்கெட் வேண்டும்?

**முரு:**—செங்கோட்டை போவதற்கு முதலாவது வகுப்பு டிக்கெட் வேண்டும்.

**குமா:**—ஐயா, சற்றுப் பொறுங்கள், முதலாவது வகுப்பு வண்டியில் காலி பெர்த் இருக்கிறதாவென்று பார்க்கிறேன்.

(குமாஸ்தா சென்று ஒரு ரிஜிஸ்தர் புத்தகத்தைப் பார்க்கிருர்.)

**குமா:**—ஐயா, முதல் வகுப்பு வண்டியில் கீழ்ப் பாகத்தில் காலி பெர்த் இருக்கிறது.

முரு:—நல்லது, உங்களுக்கு நிரம்ப வந்தனம். நான் வண்டி மாற்றாமல் செங்கோட்டைக்கு நேராகப் பிரயாணம் செய்ய முடியுமா ?

குமா:—நேராகப் பிரயாணம் செய்ய முடியாது. நீங்கள் மதுரையி லிறங்கி வண்டி மாற்ற வேண்டும்.

முரு:—மதுரையிலிருந்து செங்கோட்டைக்கு எவ்வளவு தூரம் பிரயாணம் செய்யவேண்டும் ?




குமா:—நூற்று மூன்று மைல் தூரம் பிரயாணம் செய்ய வேண்டும்.

முரு:—டிக்கெட் விலை என்ன ?

(குமாஸ்தா டிக்கெட்டின் விலையைச் சொல்லுகின்றார். முருகன் பெற்றுக்கொண்டு போகிறான்).

போ:—ஐயா, உங்கள் பெட்டியை நிறுத்து லக்கேஜ் ரசீது வாங்கித் தருகிறேன்.

முரு—நிறுக்கும் யந்திரம் எங்கே இருக்கிறது ?

**போ:**—பிளாட்பாரத்தின் கீழ்ப் புறத்தில் பார்சல் ஆபீசின் அருகில் இருக்கிறது.

(போர்ட்டர் ஒரு கை வண்டியைக் கொண்டு வந்து, அப்பெட்டியை எடுத்து அதில் வைத்து நிறுக்கும் யந்திரத்திடம் போகிறான்).

**போ:**— (நிறுக்கிறான்). ஐயா, உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அளவின்படிதான் உங்களுடைய சாமானின் கனமும் இருக்கின்றது. ஆதலால் நீங்கள் ரயில்வே கம்பெனிக்குப் பணம் கொடுக்க வேண்டியதில்லை.

(பின் இருவரும் பார்சல் குமாஸ்தாவிடம் போகிறார்கள்).

**குமாஸ்தா:**— ஐயா, உங்கள் பெயரென்ன? (முருகன் தன் பெயரைச் சொல்லுகிறான்).

**குமா:-** இப்பெட்டியின் நிறையென்ன? (போர்ட்டர் நிறையைச் சொல்லுகிறான்; முருகனைப் பார்த்து) இதோ உங்கள் ரசீது.

**முரு:**— வந்தனம்; (போர்ட்டரைப் பார்த்து) நான் ஏறும் வண்டிக்கு இதைக் கொண்டுவா. (இருவரும்) முதல் வகுப்பு வண்டிக்கு வருகின்றார்கள்).

**போ:**— இந்தக் கம்பார்ட்மெண்டில் தான் நீங்கள் ஏறவேண்டியது.

(முருகன் வண்டியில் ஏறுகிறான். போர்ட்டர் சாமான்களை உள்ளே வைக்கிறான்.)

முரு:— வண்டி புறப்படுவதற்கு எவ்வளவு நேரமிருக்கிறது?

போ:— இருபத்தைந்து நிமிஷங்கள் இருக்கின்றன.

முரு:— நான் சிற்றுண்டிச் சாலைக்குப் போய் வருகிறேன். நீ என் சாமானைப் பார்த்துக் கொள்வாயா?

போ:— நல்லதையா, தாங்கள் வருமட்டும் நான் இங்கே காத்துக்கொண்டிருக்கிறேன்.

(முருகன் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று காப்பி வாங்கிக்கொண்டு திரும்புகிறான். போர்ட்டருக்குக் கூலி கொடுத்து அனுப்புகிறான்).

## கேள்விகள்

1. முருகன் எங்கிருந்து எங்கே சென்றான்?

2. டிக்கெட் குமாஸ்தா ரிஜிஸ்தரைப் பார்த்து முருகனுக்கு என்ன தெரிவித்தார்?

3. பார்சல் ஆபீசு குமாஸ்தா ஏன் பணம் வாங்காமல் ரசீது கொடுத்தார்?

## பயிற்சி

1. நீ உன்னை முருகனாக எண்ணிக்கொண்டு, நடந்தவைகளை உனது தோழனுக்குச் சொல்லுவது போல எழுது.

கந்தன் அடித்தான்; கந்தனை அடித்தான்.

இந்த வாக்கியங்கள் ஒரே அர்த்தமுள்ளவைகள் அல்ல. முதல் வாக்கியத்தில் உள்ள பெயர்ச் சொல்லின்

பொருளை "ஐ" வேறுபடுத்துகின்றது. இப்படி உருபுகள் பெயர்ப் பொருளைப் பல வகையாக வேறுபடுத்தும்.

கந்தன் வந்தான். இது முதல் வேற்றுமை எனப்படும்.
கந்தனை அழைத்தான். இதில் "ஐ" என்ற உருபு பெயர்ப் [பொருளை வேறுபடுத்தியது.

| | | |
|---|---|---|
| கந்தனால் அடிபட்டான் | இதில் 'ஆல்' உருபு | ,, |
| கந்தனுக்குக் கொடுத்தான் | இதில் 'கு' உருபு | ,, |
| கந்தனின் நீங்கினன் | இதில் 'இன்' உருபு | ,, |
| கந்தனுடைய வேல் | இதில் 'உடைய' உருபு | ,, |
| கந்தனிடம் உள்ளது | இதில் 'இடம்' உருபு | ,, |

கந்தா! இது அழைத்தல் பொருளைப் பெற்றது.

இவ்வாறு பெயர்ப் பொருளை வேறுபடுத்தும் உருபுகளுக்கு வேற்றுமை உருபுகள் என்று பெயர்.

| வேற்றுமை | | உருபு | உதாரணம் |
|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | தனி உருபில்லை | பொன்னன் |
| இரண்டாம் | ,, | ஐ | பொன்னனை |
| மூன்றாம் | ,, | ஆன், ஆல், ஒடு, ஓடு | பொன்னனோடு |
| நான்காம் | ,, | கு | பொன்னனுக்கு |
| ஐந்தாம் | ,, | இன், இல் | பொன்னனின் |
| ஆறாம் | ,, | அது, உடைய | பொன்னனது |
| ஏழாம் | ,, | இல், கண் முதலியன | பொன்னனில் |
| எட்டாம் | ,, | தனி உருபில்லை | பொன்னா |

முருகன் டிக்கெட் வாங்குவதற்குப் புக்கிங் ஆபீசைத் தேடிப் பிளாட்பாரத்தில் சென்றான். இவ் வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களைச் சொல்லு. அவை இன்னின்ன வேற்றுமை உருபுகளை ஏற்றன என்று சொல்லு.

முருகன் இச் சொல்லுக்குத் திணை, பால், எண் இடம், வேற்றுமை சொல்.

# 9. நமது தேசம்

கோச்சி மலை குடகுமலை (என்ற சந்தம்)

இந்துதேசம் நமதுதேசம் ஏற்றபெரிய தேசம்—இது
இமயமுதல் கன்னி வரையும் இணைந்த பெரிய தேசம் (இந்)

வந்தவரை ஆதரிக்கும் வளமிகுந்த தேசம்—இது
மகரிஷிகள் பெரியவர்கள் வந்துதித்த தேசம் (இந்)

ராஜபுதனம் தக்காணம்இரு ரத்னம்போன்ற தேசம்-இது
ராஜபுத்ரர் தமிழரசர் ராஜ்யமாண்ட தேசம் (இந்)

பூஜாபலம் புண்யம்கண்யம் புகழ்நிறைந்த தேசம்-இது
பூவைமாரைக் கற்புத்தெய்வம் பொருந்திக் காக்குந் தேசம் (இந்)

ஆணும் பெண்ணும் கல்விகற்று அறிவிற்சிறந்த தேசம்-இது
அரியகம்பன் அவ்வையாரும் அவதரித்த தேசம் (இந்)

[இது
பேணுமுயிரில் மானம்பெரிதாய்ப் பெருமை யடையும்தேசம்-
பிரத்தியட்ச தெய்வபக்தி பெருகி யோங்கும் தேசம் (இந்)

சத்யம்சீலம் சாந்தம்ஒழுக்கம் தங்கிவளரும் தேசம்—இது
தனித்ததமிழும் ஆர்யமொழியும் சார்ந்து நிலவும் தேசம் (இந்)

தத்வஞானம் உலகஞானம் தாண்டவம்புரி தேசம்—இது
தரணிக்கெல்லாம் நாகரீகம் தந்தபழைய தேசம். (இந்)

## பயிற்சி

நாராயணன் : இது ஆணைக்குறிக்கும் பெயர்ச் சொல். ஆதலால் இதை ஆண்பாற் பெயர்ச் சொல் என்று சொல்ல வேண்டும். பால் = பிரிவு. நாராயணி: இது பெண் பிரிவைக் குறிக்கும் பெயர்ச்சொல். ஆதலால் இதை பெண்பாற் பெயர்ச்சொல் என்று சொல்லவேண்டும்.

உழவர்கள் : இது மக்களில் ஒன்றிற்கு மேற்பட்ட பலரைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகும். ஆதலால் இதனைப் புலர்பாற் பெயர்ச்சொல் என்று சொல்லவேண்டும். இவ்வாறு உயர்ந்த பிரிவாகிய மக்கள் பெயர்களில், ஆண் பாற் பெயரென்றும், பெண்பாற் பெயர் என்றும், பலர் பாற் பெயரென்றும் மூன்று பிரிவுகள் உண்டு.

பாண்டியன், மனைவி, நாயகன், அமைச்சர்: இப்பெயர்ச் சொற்கள் இன்னின்ன பாற்பெயர்கள் என்று சொல்.

வீடு, காசி நகர்: இவை என்ன திணைப் பெயர்கள் ? மனிதர்களைப்போல உயர்வு அல்லாத பெயர்கள். ஆதலால் இவைகள் உயர்வல்லாத பெயர்கள்; அஃறிணைப் பெயர் களாகும். இந்த அஃறிணைப் பெயர்கள் ஒன்றைக் குறித் தால் ஒன்றன்பாற் பெயராகும். வீடு, நகர், விளக்கு: இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளையே குறிப்பது காண்க.

வீடுகள், விளக்குகள் : இவை ஒன்றுக்கு மேற்பட்ட பல எண்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவ்வாறு வரும் பெயர்கள் எல்லாம் பலவின்பாற் பெயர்ச்சொற்களாகும். ஆகவே அஃறிணைப் பெயர்ச்சொற்களும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பாற் பெயர்ச்சொல்லென்றும், பலவற் றைக் குறிப்பனவெல்லாம் பலவின்பாற் பெயர்ச் சொற்கள் என்றும் சொல்லப்படும்.

## 10. கெடுவான் கேடு நினைப்பான்

| | | | |
|---|---|---|---|
| கொல்லைக்காரன் | மனோரதம் | பதுங்கி | பூர்த்தி |
| உயிர் நண்பன் | அவஸ்தை | சுருட்டி | விடுவி |
| தோல் வலை | எதேச்சை | குயுக்தி | இதம் |
| மகததேசம் | சுபாவம் | நேர்த்தி | பயன் |
| கூட்டாளி | தியாகம் | அடவி | சக்தி |

மகத தேசத்தில் ஒரு மானும் காகமும் சிநேகமாய் இருந்தன. மான் எதேச்சையாகப் புல் முதலியவைகளைத் தின்று கொழுத்திருந்தது. அதை ஒரு நரி பார்த்து, 'இதைக் கொல்வதற்கு எனக்குச் சக்தி யில்லை. ஆதலால் வஞ்சனையால் இதைக் கொல்லவேண்டும்' என்று நிச்சயித்து அதனருகிற் சென்று, "நண்பா, சுகமா?" என்று கேட்டது. மான் அதைக் கேட்டு, "நீ யார்?", என, "ஐயா, நானிந்த அடவியில் அலைந்து திரிகின்ற யாரு மற்ற பாவி; உன்னைக் கண்டு மகிழ்ந்தேன்; உனக்கு வேலை செய்துகொண்டு உன்னிடத்தில் இருக்கவே ஆசைப் படுகின்றேன்" என்று நரி குயுக்தியாய்ப் பேசிற்று. அதைக் கேட்ட மான், நரியைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு வழக்கமாகத் தங்குமிடத்திற்கு வந்தது.

அங்கு வாசம் பண்ணிக்கொண்டிருந்த மானின் சிநேகமாகிய ஒரு காகம் இவ்விரண்டையும் பார்த்து, மானை நோக்கி, "உனது பக்கத்திலிருப்பது யார்?" என்று வினவ, மான் காகத்தைப் பார்த்து, "இந்நரி என்னோடு நட்புக்கொள்ள விரும்புகிறது" என்று பதில் சொல்லிற்று. உடனே காகம், "நண்ப, இடை

யில் வந்த எவரையும் நாம் நம்பலாகாது. அவ்வாறு நம்பி இடங் கொடுத்தால் நமக்கு ஆபத்து உண்டாகும். எவருடைய சுபாவத்தையும் அறியாமல் நம்பி நமது அந்தரங்கத்தை வெளியிட லாகாது'' என்றது. மான் அதைக் கேட்டு, "நண்பா, நீ எவ்வாறு எனக்கு ஆப்தமாக இருக்கிறாயோ, அவ்வாறே இதுவும் இருக்




கட்டும். நீ தடை செய்யாதே'' என்று அந் நரியைத் தன்னோடு இருக்க வைத்துக் கொண்டது.

பகல் முழுவதும் அவை தங்கள் வழக்கத்தின் படி உணவு தேடிச் சென்று, பொழுது போனதும் அந்த இடத்தில் வந்து மூன்றும் கூடும். இவ்வாறு

800 009 13974

பல நாள் சென்றன. ஒரு நாள் அந்நரி மானைப் பார்த்து, "பிரிய நண்பா, ஒரு காட்டில் நேர்த்தியான பயிர் இருக்கிறது. நீ என்னோடு வந்தால் அதை உனக்குக் காட்டுகிறேன்" என்று சொல்லி அதைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டிற்று.

அன்றிருந்து அந்த மான் நாள்தோறும் சென்று பயிரை மேய்ந்துகொண் டிருந்தது. ஒரு நாள் கொல்லைக்காரன் பார்த்து அந்த மானைப் பிடிப்பதற்கு வலையைக் கட்டினான். மான் வழக்கம்போல் வந்ததும் வலையில் அகப்பட்டுக் கொண்டது. அச் சமயத்தில் நரி வந்து பார்த்து, 'ஆகா! இன்று எனது மனோரதம் பூர்த்தியாயிற்று; இதனுடைய கொழுத்த மாமிசத்தையும் எலும்பையும் எனதாசை தீரத் தின்பேன்' என்று வாயில் நீர் ஊற நினைத்துக்கொண்டு பேசாமல் நின்றது. அதைக் கண்ணுற்ற மான், "நண்ப, ஏன் சும்மா விருக்கின்றாய்? இவ் வலையை அறுத்து என்னை இச்சங்கடத்தினின்றும் விடுவி. உயிர் நண்பர்கள் ஆபத்துக் காலத்திலேயே உதவுவார்கள்" எனவும், அந்நரி, "நண்ப, நீ சொல்வதெல்லாம் உண்மைதான். இன்று நான் விரதமா யிருக்கிறபடியால் இத் தோல் வலையைத் தீண்ட மாட்டேன். நாளைக்கு நீ என்ன சொன்னாலும் கேட்பேன். என் குணத்தை நீ அறியாயா? என் அன்பர்களுக்காக என்னுயிரையே தியாகம் பண்ணுவேன் நான்" என்று சொல்லி அதன் பார்வைக்குத் தப்பிப் பக்கத்தில் ஓரிடத்தில் ஒளிந்து கொண்டிருந்தது.

இரவாயிற்று, மான் வரவில்லை. உடனே காகம் அதைத் தேடும் பொருட்டுப் பல விடங்களுக்குஞ் சென்றது; அவ்வாறு அலைந்து திரிந்து பார்க்கையில் மான் வலையில் அகப்பட்டு அவஸ்தையில் இருப்பதைக் கண்டு, "நண்ப, இத்துன்பம் உனக்கு எவ்வாறு வந்தது?" என்று கேட்க, மான், "அன்ப, உன் வார்த்தையைக் கேளாததால் அடைந்த பயன்" என, காகம், "உன் கூட்டாளி நரி எங்கே?" என்றது. அதற்கு அந்த மான், "அது எனது இறைச்சியைத் தின்பதற்காக இங்கே ஓரிடத்தில் ஒளிந்துகொண்டிருக்கும்" என்றது. காகம், "ஒரு நண்பன் தனக்கு இதம் பண்ணுகிறவனது பேச்சைக் கேட்கவேண்டும். கேளாவிட்டால் விபத்து நேரிடும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது, கொல்லைக்காரன் ஒரு தடியை எடுத்துக்கொண்டு ஓடி வந்தான். காகம் அவனைப் பார்த்துப் பின் மானை நோக்கி, "நீ மூச்சை யடக்கிக்கொண்டு இறந்ததைப் போல் கிடந்தால், நீ செத்தாய் என்று நினைத்துக்கொண்டு, அவன் வலையைச் சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப் போவான். அதற்குள் நான் கத்துகிறேன். நீ எழுந்து ஓட்டம் பிடி" என்று பொய்யாக மானின் மீது அமர்ந்து, அதன் கண்ணைக் கொத்திக் கொண்டிருந்தது.

கொல்லைக்காரன் மான் இறந்த தென்று நினைத்து வலையைச் சுருட்டி ஓரிடத்தில் வைக்கப் போனான். உடனே காகம் கத்தினது. மானும் ஓட்டம் பிடித்தது. தோட்டக்காரன் மானைக் கொல்

வதற்குத் தனது தடியை வீசியெறிந்தான். அத்தடி பதுங்கியிருந்த நரியின் தலைமேல் பட்டது. அது மண்டை யுடைந்து மூளை சிதறி இறந்தது. பின்னர் மானும் காகமும் வெகு நாள் நட்பாயிருந்தன.

## கேள்விகள்

1. மான் நரியை ஏன் தன்னோடு சேர்த்துக்கொண்டது?

2. நரி மானை எவ்வாறு வலையில் சிக்க வைத்தது?

3. வலையி லகப்பட்ட மானைக் கண்ட நரி என்ன சொல்லியது?

4. காகம் எவ்வாறு மானை மீட்டது?

## பயிற்சி

1. மானும் நரியும் பேசிக்கொண்டதைச் சம்பாஷணை நடையில் எழுது.

2. பொழுதடைந்ததும், அந்தரங்கத்தை, உயிர் நண்பர்கள், மனோரதம்: இவைகளை வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. கோல்லைக்காரன்: இதற்குப் பெண் பால், பலர் பால் கூறு.

4. மான் அதைக்கேட்டு, "நீ யார்?" என்றது. மான் என்ற சொல்லுக்குத் திணை, பால், எண், வேற்றுமை சொல்.

5. (1) மான் அதைக் கண்டது.
   (2) மான் தின்று கொழுத்தது.
   (3) அந்தக் காட்டில் நேர்த்தியான பயிர் இருக்கிறது.

படித்த எழுத்திலுள்ள சொற்கள் தொழிலைக் காட்டுகின்றன. ஆதலால் அவை வினைச் சொற்களாகும். கண்டது, தின்று, நேர்த்தியான: இவைகளில் பொருள் முடிந்தது எது? பொருள் முடியாதவை எவை?

ஒரு காரியத்தின் முடிவை யுணர்த்தும் வினை, முற்று வினை ஆகும். கண்டது. இருக்கிறது. வினைச்சொல் முடிவு பெறாமல் இருந்தால் எச்ச வினை யென்று சொல்லப்படும்.

'தின்று' என்ற எச்ச வினை பொருள் முடியாமல் 'கொழுத்தது' என்பதைக் கொண்டு முடிகின்றது. ஆதலால் இது வினையெச்சம் ஆகும்.

'நேர்த்தியான' என்ற எச்சவினை பொருள் முடியாமல் 'பயிர்' என்ற பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிவதால் பெயரெச்சம் ஆகும். ஆகவே வினைச்சொல், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என மூன்று வகைப்படும்.

வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்: இவை ஒவ்வொன்றுக்கும் மூன்று உதாரணம் கொடு.

பட்டணம், வஸ்திரம், வீதி, புத்தகம், கதவு: இவைகள் என்ன பாற் பெயர்கள்? இவைகளுக்குப் பலவின்பாற் பெயர்கள் சொல்லு.

மதுரை, வசந்தன்: இவை என்ன திணை? இவை என்ன பாற் சொற்கள்.

கீழ்க்கண்ட வினைப் பகுதிகளுக்கு வினைமுற்றுக்களும், வினையெச்சங்களும் பெயரெச்சங்களும் கூறுக.

வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்.

(உ-ம்) படி - படித்தான் - படித்து - படித்த.

1. செல். 2. உண். 3. நட. 4 படி.

# 11. கவியரசி

| | | | |
|---|---|---|---|
| அருங்கலை விநோதர் | ஆராய்ச்சியாளர் | நிறுவினர் | தொகுத்து |
| விஞ்ஞானக்கலை | ஏற்றத்தாழ்வு | அருங்கவி | அரும்பாடு |
| பல்கலைக் கழகம் | ஸ்காலர்ஷிப் | அமைத்து | புவிமிசை |
| அறிவியல் புலவர் | முழுஜீவியம் | செய்யுள் | மகிழ்ச்சி |
| குழவிப்பருவம் | ஐரோப்பா | வயோதிக | ஆய்ந்து |
| நாட்டபிமானம் | சூரிய அறிவு | ஜெர்மனி | இயற்ற |
| பழக்க வழக்கம் | கணிதநூல் | அறிமுகம் | நிஜாம் |
| முன்னேற்றம் | ஐதராபாத் | ஸ்ரீமதி | மகவு |

ஐதராபாத் என்னும் நகரில் அகோரநாத சட்டோபாத்தியாயர் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தனர். அவர் மனைவியார் ஸ்ரீமதி வரத சுந்தரி தேவியார். அவர் பலகலைகளையும் கற்றுத் தேர்ந்து, உயர்தரப் பட்டமாகிய 'அறிவியல் பெரும் புலவர்' என்னும் பட்டத்தையும் பெற்றார். விஞ்ஞானக் கலைகளையும் கற்க விரும்பிய அவர் ஜெர்மனி தேசத்திற்குச் சென்று, அக் கலைகளையும் கற்று, இந்தியாவிற்குத் திரும்பினர். அவர் ஐதராபாத் வந்ததும் நிஜாம் கல்லூரியை ஏற்படுத்தினர்; தமது முழு ஜீவியத்தையும் கல்விக்கே செலவு செய்தார்.

இத்தகைய கலைஞானிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பெற்றோர்கள் அம்மகவுக்குச் சரோஜினி தேவி யென்று பெயரிட்டுப் போற்றி வளர்த்து வந்தனர். அவர்களுடைய அரிய குணங்கள் யாவும் சரோஜினி யிடத்தில் விளங்கின. குழவிப் பருவத்

திலே அவருடைய தந்தையார் தம் பெண்ணுக்கு ஆங்கில பாஷையைக் கற்றுக் கொடுத்தார். ஆனல் குழந்தைக்கு அதில் கருத்துச் செல்லவில்லை. தந்தையார் கண்டிப்பால் பெற்றோரிடம் பேசும்போதெல்லாம் குழந்தை ஆங்கிலமே பேசும்.

சரோஜினி தேவிக்குக் கூரிய அறிவுண்டு; உயர்ந்த நோக்குடையவர். இவரைக் கணித நூற் பயிற்சியில் வல்லவ ராக்க வேண்டு மென்று தந்தை பெரிதும் விரும்பினர். ஆனல் இவருக்கு மனம் அதிற் செல்ல வில்லை. பாடல்களைப் படிப்பதிலும், பாக்கள் இயற்றுவதிலும் இவருக்கு விருப்ப முண்டு. இவர் தமது இளம் பிராயத்திலேயே ஒரு சிறந்த பாடலைப் பாடினர். இவ்வம்மையார் தம் பன்னிரண்டாம் வயதிலேயே மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினர். என்றாலும், அத்தேர்தல் அவருக்கு மகிழ்ச்சி யளிக்கவில்லை. எனினும், ஏனையோர் அவரை மெச்சிப் புகழ்ந்தனர். இவர் ஸ்காலர்ஷிப் பெற்று, இங்கிலாந்திற்குச் சென்று, லண்டன்மா நகரிலுள்ள அரசர் கல்லூரியில் கல்வி கற்றார். அக் காலத்தில் அவருக்குப் பல அறிவாளிகளுடைய நட்பு ஏற்பட்



டது. அவருடைய நுட்பமான அறிவைப் புகழ்ந்தவர் பலர். அவர்களுள் பெரும் ஆராய்ச்சி யாளரான சர். எட்மண்ட் கோஸ் என்பவர் ஒருவர். லண்டன் மாநகரில் அருங்கவி விரைந்து பாடும் எட்மண்ட் கோஸ் என்பவருக்கு இவர் அறிமுகம் செய்விக்கப் பட்டனர். இவர் இயற்றிய பாடல்களைக் கண்ட அப் பெரியார், இச் செய்யுட்களில் கீழ் நாட்டுணர்ச்சிகளும், கருத்துக்களும் அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்; "இவர் தம் தாய் நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்றுவார்" என்று கூறினர்.

அச்சொல் இவருக்குச் சிறந்த அறவுரையாயிற்று. அன்று முதல் கோஸ் என்பவருடைய சொல்லின்படியே செய்யுள் இயற்றத் தொடங்கி, உயர்ந்த கருத்துள்ள பலவிதமான செய்யுள்களை இயற்றினர்; அவைகளை யெல்லாம் தொகுத்து ஒரு நூலாக அச் சேற்றினர்; அப்பாடல்களுள் சிலவற்றைக் கோஸ் என்பவருக்கே உரிமையாக்கினர். அப்பொழுது அவருக்கு வயது பதினாறு.

அப்பொழுது ஆர்தர் சைமன்ஸ் என்னும் மற்றொரு அறிஞர் அவருக்கு நண்பர் ஆயினர். தேவியார் இளம் பருவத்திலேயே ஒவ்வொரு பொருளையும் ஆய்ந்து பார்க்கும் அறிவின் திறமுடையவராய் விளங்கினர்; இன்பமாகப் பேச வல்லவர்; இளையராயிருந்தாலும் வயோதிக மன நிலை யுடையவர்; இந்தியரின் அறிவைத் தம் பாக்களின் வாயிலாய் அயல் நாட்டாருக்கு அறிவித்தார். அவருடைய நோக்கங்க

ளெல்லாம் நாட்டபிமானமாகவே இருந்தன. அவருடைய முகத்தில் புன்னகை தவழ்ந்துகொண்டேயிருக்கும். அவர் ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்பி வந்தார். வந்தவர் பொன்னையும் பொருளையும் சுக வாழ்வையும் விரும்பாமல் அவற்றை வெறுத்தார்; ஏழை மக்களுக்குத் தொண்டாற்றும் சன்மார்க்க சேவையே சிறந்த சேவை என விரும்பினர். ஐதராபாத் முதலிய பல நாடுகளில் மாதர் முன்னேற்ற இயக்கங்களில் தலைமை வகித்தும், பாழும் வெள்ளத்தில் ஏழை மக்கள் அகப்பட்டு வருந்தும்போது **அகில இந்திய நிதி** என ஒரு பெரும் நிதியைத் திரட்டி அவர்களைக் காப்பாற்றியும், தமக்கென வாழாப் பிறர்க் குரியாளராய்ப் பரோபகாரப் பணியாற்றி வந்தார்.

ஸ்ரீமதி தேவியாரின் தேச சேவையின் திறமையைக் கண்டு பாராட்டாத மக்கள் இந்தியாவில் மட்டுமல்ல, வேறு எந்த நாட்டிலும் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். தேவியாரின் சிறந்த தேசத் தொண்டும், அவரது கவிகளும் காவியங்களும், அவர் தேசங்கள் தோறும் திக்விஜயம் செய்து புரிந்துவரும் அரிய பிரசங்க வன்மையும், மக்களிடையே ஒரு உணர்ச்சியை உண்டாக்கித் தேசத் தொண்டில் அவர்கள் ஊக்கமும் உற்சாகமும் பெற்றேங்குமாறு செய்துவருகின்றன.

ஜாதி மத நிற வகுப்புப் பேதங்களை ஒழிக்கவும், தீண்டாமை முதலிய தீமைகளை விலக்கித் தேசிய

ஒற்றுமை நிலைக்குமாறு அமைக்கவும், அம்மையார் அல்லும் பகலுமாக அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றார். அவர்களுடைய சேவையின் பலனாக நமது நாடு சுதந்திரம் பெற்றது. அம்மையார் இப்பொழுது ஒரு மாகாணத்தின் கவர்னராகவிருந்து ஆட்சி புரிந்து வருகிறார். இவர் பெயரும் புகழும் **"கவியரசி சரோஜினி தேவியார்"** என்று புவிமிசை நின்று நிலவி வருகின்றன.

## கேள்விகள்

1. ஐதராபாத் நிஜாம் கல்லூரியை நிறுவினது யார் ?

2. சரோஜினி தேவியார் இங்கிலாந்து செல்லும் படியாகக் கிடைத்த உதவி யாது?

3. மேல்நாட்டுப் பெரியார் இத் தேவியார் பாடல்களைப் பார்த்து என்ன கூறினர்?

4. இவர், நம் நாடு முன்னேறுவதற்குக் காட்டிய வழி யாது?

## பயிற்சி

1. ஸ்காலர்ஷிப், பழக்க வழக்கங்கள், அரும்பாடு: இவைகளை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. தேவி, தந்தை, அரசி, உறவினர் : இவை இன்ன பால்கள் என்று சொல்லு.

3 என் தந்தையிடமிருந்து கடிதம் வந்தது.
............தங்கை...............வருகிறது.
............தம்பி...............வரும்.

இந்த மூன்று வாக்கியங்களிலுள்ள வந்தது, வருகிறது, வரும் என்பவை ஒரு செயலையே காட்டுகின்றன. என்று

லும், அச் செயல் எப்பொழுது நடந்தது என்பதை ஒரு சொல்லே மூன்று வகையாக வேறுபடுத்திக் காட்டுகிறது.

'வந்தது' ஏற்கனவே வந்துவிட்டதென்று நடந்து (இறந்து) போன செயலைக் காட்டுகிறது. இதற்கு இறந்த காலம் என்று பெயர்.

'வருகிறது' என்பது நடந்துகொண்டிருக்கும் (நிகழ்) செயலைக் காட்டுகிறது. ஆகையால் இது நிகழ் காலம்.

'வரும்' என்பது இனிமேல் நடக்கப் போவதைக் (எதிர்) காட்டுகிறது. இதற்கு எதிர்காலம் என்று பெயர்.

இந்தப் பாடத்தில் வந்துள்ள இறந்தகால வினைச் சொற்கள் பத்து எழுதுக.

'வருவான்' இச் சொல்லிருந்து வரப்போகின்றவன் ஆண்மகன் என்றும், உயர்திணையைச் சேர்ந்தவன் என்றும், ஒருவன் என்றும், இவன் முன்னிலையில் இல்லை என்றும், இனிமேல் நடக்கப்போகிறதென்றும் அறிந்து கொள்ளுகிறோம் ஆகையால் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் முதலியவற்றைக் காட்டும்.

சட்டோபாத்தியாயர் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார்:— இதிலுள்ள பெயர்ச் சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் இலக்கணம் சொல்லு.

கீழ்க்கண்ட சொற்களுக்கு நிகழ் காலமும் எதிர் காலமும் கூறு:

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| உண்டான் | — | — |
| பாடினான் | — | — |
| தேறினான் | — | — |
| வந்தன | — | — |

## 12. தீமைக்கு நன்மை

| | | | |
|---|---|---|---|
| அந்திப்பொழுது | வெள்ளையன் | தோல்லே | கடுகடுப்பு |
| ஈகை இரக்கம் | புலித்தோல் | குடியேறி | விடாய் |
| சூரியோதயம் | வேட்டை | ஆயாசம் | தடம் |

அமெரிக்காவின் காடுகளில் குடியேறிய வெள்ளையன் ஒருவன் ஒரு நாள் அந்திப் பொழுதில் தன் வீட்டு வாசலில் நின்றான். அப்போது களைப்பும் ஆயாசமும் கொண்ட ஒரு இந்தியன் மெதுவாக அவனிடம் வந்து கொஞ்சம் உணவு கேட்டான்.

அவ்வெள்ளையன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு "என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்று கடுகடுப்பாய்ச் சொன்னான். பிறகு அவ்விந்தியன் தாகவிடாய் தீர்த்துக் கொள்வதற்குத் தண்ணீர் கேட்டான். ஆனால் அந்த மனிதன், "ஓ இந்திய நாயே, அப்பாலே போ" என்று மறுத்து விட்டான்.

அந்த இந்தியன் ஈகை யிரக்க மற்ற அந்த வெள்ளையனைச் சிறிது நேரம் பார்த்துவிட்டுத் தன் வழியே போனான்.

சில காலத்திற்குப் பின்னர் அவ்வெள்ளையன் வேட்டைக்குச் சென்றான். பெருங் காடாயிருந்ததால் வேட்டை யாடும்பொழுதே வழி தவறிவிட்டான். ஆதலால் அங்கு மிங்கும் அலைந்தானே யொழிய, பாதை கண்டு தன் பதிக்குப் போக முடியவில்லை. முடிவில் நல்ல காலமாக ஒரு இந்தியனுடைய குடிசை காணப்பட்டது. அவன் உள்ளே நுழைந்து, அங்கிருப்பவனைப் பார்த்து, "நகரத்துக்குப் போகும் வழி

யாது ?'' என்று கேட்டான். "அது வெகு தொலை வில் இருக்கிறது. நீர் அத்தடத்தை அடைவதற்குள் இருண்டுவிடும்; ஆதலால் இன்று இரவு அப் பாதைக்குப் போக முடியாது. இக்காட்டில் தங்கினால் துஷ்ட மிருகங்கள் துன்புறுத்தும். உமக்கு விருப்ப மானால் என்னோடே தங்கலாம்'' என்று அவ்விந்தி யன் அன்போடு கூறினான். வேட்டைக்காரன் இந்தி யன் சொன்னபடி அங்கேயே தங்கி விட்டான்.

அவ்விந்தியன் உணவு தயாரித்து அவனுக்கு உண்ணக் கொடுத்து, குடிப்பதற்குத் தண்ணீருங் கொண்டுவந்து கொடுத்தான்; பின்னர் படுப்பதற் குப் புலித் தோலையும் விரித்தான்.

அதிகாலையில் இந்தியன் அந்த வெள்ளையனைக் கூப்பிட்டுச் சூரியோதயமாகி விட்டதென்றும், நடக்க வேண்டிய தூரம் அதிகமா யிருக்கிறதென்றும், ஆத லால் புறப்பட வேண்டுமென்றும் சொன்னான். அவன் வழி தவறிப் போகாதபடி அந்த இந்தியன் தான் வழிகாட்டியாக வருவதாகவுங் கூறினான். துப்பாக்கி யுடன் அவ்விந்தியன் முன்னே செல்ல, வெள்ளையன் அவனைப் பின் தொடர்ந்தான்.

அவர்கள் அதிகாலையில் புறப்பட்டதனால் அவ் வெள்ளையனுக்கு இந்தியனைக் கண்டுகொள்ள முடிய வில்லை. ஆனால் இப்பொழுது அவ்விந்தியன் முகம் அறிமுகமானது போல் தெரிந்தது. எனினும், எந்த விடத்தில் பார்த்தது என்று அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இறுதியில் அறிந்தான்.

'ஆ! இவ்விந்தியனையே முன்னொரு சமயத்தில் உணவு கொடாமல் நாம் விரட்டிவிட்டோம்' என்று வெள்ளையன் உணர்ந்தான். வெகுதூரஞ் சென்ற பிற்பாடு அந்த இந்தியன் நின்று "ஐயா, நீங்கள் போகவேண்டிய பாதை இன்னும் இரண்டு மைல்தானிருக்கிறது" என்று வெள்ளையனது முகத்தை நேராகப் பார்த்தான். "ஐயா, நான் யார் என்று தங்களுக்குத் தெரிகின்றதா?" என்று இந்தியன் கேட்க, அவ்வெள்ளையன் நாணி "நான் உன்னைப் பார்த்திருக்கிறேன்" என்றான். "உங்களுடைய வாசற்படியிலேயே என்னைக் கண்டீர்கள். இப்பொழுது என்னை விட்டுப் பிரியப்போகின்றீர்கள். ஆதலால் தங்களிடம் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். எப்பொழுதாவது ஓர் ஏழை இந்தியன் பசியாலும் தாகத்தாலும் இளைத்துத் தங்களிடம் உணவும் நீரும் கேட்டால், 'இந்திய நாயே, அப்பாலே போ' என்று சொல்ல வேண்டாம்" என்று சொல்லி, இந்தியன் தன் வழியே சென்றான்.

## கேள்விகள்

1. உணவு கேட்ட இந்தியனைப் பார்த்து வெள்ளையன் என்ன சொன்னான்?
2. வெள்ளையன் வேட்டையாடச் சென்று வழி தவறிய பொழுது எங்குச் சென்று யாரைக் கண்டான்?
3. வேட்டைக்காரனுக்கு உதவியவன் யார்?
4. வெள்ளையன் இந்தியன் வீட்டில் தங்கியிருந்த பொழுது, இந்தியன் அவனை எவ்வாறு உபசரித்தான்?

5. இந்தியன் வேட்டைக்காரனுக்கு என்ன கூறினான்?

## பயிற்சி

1. இந்தியன், வெள்ளையன், வேட்டைக்காரன்: இவைகள் என்ன திணைகள்? என்ன பால்கள்?

2. அவன் போனான்.
அப்பாலே போ.

இந்த வினைச் சொற்களுக்குள் வேறுபாடுண்டு. 'போனான்' என்ற சொல் நடந்த செயலைக் காட்டுகின்றது.

'போ' என்ற சொல் ஒருவனைப் போகும்படி கட்டளை யிடுகின்றது. இவ்வாறு ஒருவனுக்குக் கட்டளையிடுகின்ற வினைக்கு ஏவல் வினை என்று பெயர்.

3. முனியா, வா.
சுவாமி, வருக.

இந்த இரண்டு வாக்கியங்களிலுள்ள வா, வருக என்ற இரண்டும் வினைமுற்றுக்கள் தான். ஆனால் வா என்பது தன்னிலும் சிறியவனை வரும்படி ஏவுகின்றது. இவ்வாறு கட்டளை யிடாது, பெரியோர்களிடத்தில் மரியாதையாகக் கேட்டுக்கொள்ளும் வினைக்கு வியங்கோள் வினையென்று பெயர். இந்த வியங்கோள் வினைமுற்று வாழ்த்து, வேண்டல், வைதல் முதலிய பொருள்களில் வரும்.

பெருமானே, அருள் புரிக!
அரசே, வாழ்க!
துஷ்டனே, அழிக!

ஏவல் வினை, வியங்கோள் வினைகள் வரும்படி இரண்டு வாக்கியங்கள் எழுது.

## 13. முயற்சி வீணகாது

(ராஜ ராஜ ராஜ ராஜ என்ற சந்தம்)

இங்கிலீஷ் நோட் தாளம்-ஏகம்

வேந்த ரோருவர் குதிரை மீது
வேட்டை யாட ஆவலாய்
வீரர் நால்வர் தொடர்ந்து வரவே
விரைந்து சென்றார் காவலாய்
தோட்ட மோன்றில் கிழவ னொருவன்
சுறுசு றுப்புடன் பலகுழி
தோண்டி யே மாங் கொட்டை நட்டான்
சோர்ந்தி டாமல் அவ்வழி
சென்ற அரசர் அவனைக் கண்டு
சிரித்துக் கொண்டு "கிழவனே,
செழித்திம் மரங்கள் வளரும் வரையும்
ஜீவிப் பாயோ உழவனே,
ஆசை உனக்கு அதிக" மென்றார்
அனைவரும் நகைத் தாருடன்
அந்த வார்த்தை கேட்ட கிழவன்
"ஐயா, இதுவும் என்கடன்
என்றன் பூட்டன் பாட்டன் மார்கள்
இப்படித் தான் நட்டனர்
இருந்து நானும் அனுப விக்கிறேன்
இறந்தே அவர்கள் பட்டனர்
உணர்ந்து கொள்வீர்" என்றான் கிழவன்
உயர் அரசர் மகிழ்ந்தனர்
உடனே நூறு ரூபாய் நோட்டில்
ஒன்றை எடுத்துத் தந்தனர்.

# 14. கருணையன்

| | | | |
|---|---|---|---|
| மனிதசஞ்சாரம் | தேவசந்நிதி | அவதரித்து | கடமை |
| திருவுளச்சீட்டு | கருணையன் | மரியம்மை | தீவிரம் |
| தேவாராதனை | பரலோகம் | எலிசபேத் | விதித்த |
| மூலஸ்தானம் | இல்லறம் | வானுலகு | வேதம் |
| அளவளாவி | ஆகமவிதி | மாதவன் | தூபம் |
| ஆண்டவன் | ஆசாரியன் | திருவருள் | சூட்டு |
| திருத்தொண்டு | கோத்திரம் | அக்கிரமம் | பரகதி |
| ஞானஸ்நானம் | ஏரோது | இளவல் | ஜெபம் |
| தூப வேள்வி | யூதேயா | வேள்வி | நாமம் |
| தேவதூதன் | கற்பனை | ஏசுநாதர் | ஆசி |
| முரணாக | முதிர்ந்த | அநீதி | |

ஏரோது என்பவன் யூதேயா தேசத்திற்கு அரசனாக வந்தான். அக்காலத்தில் தேவாராதனை நடத்துவதற்குத் தனியான ஒரு வகுப்பினர் இருந்தனர். அந்த வகுப்பில் சகரியா வென்னும் பெயர் கொண்ட ஆசாரியன் ஒருவன், தன் மனைவி எலிசபெத் என்பவளோடு இல்லறம் இனிது நடாத்தி வந்தனன். இவ்விருவரும் இறைவன் கற்பனைகளுக்கு முரணாக நடவாது ஆகம விதிப்படி குற்றமற்றவர்களாய் ஆண்டவன் திருவருளுக்கு ஆளாயினர்.

இந்நீதிமான்களுக்குக் குறை ஒன்றிருந்தது. இவர்கள் பிள்ளையின்றிப் பெரிதும் வாட்டமுற்றுத் தவங்கிடந்தனர்; வயது முதிர்ந்தவர்களாயும் இருந்தனர்; சகரியா தன் கோத்திரத்தின் முறைப்படி

தேவ சந்நிதியில் திருத்தொண்டு செய்யும்படி நேர்ந்தது. அக்காலத்தில் இத்தொண்டு செய்வதற்குத் திருவுளச் சீட்டுப் போட்டு ஆசாரியனைத் தெரிந்துகொள்வது வழக்கம். இம்முறைமையின்படி சகரியா தேவாலயத்திற்குள் பிரவேசித்துத் தூபங் காட்டுவதற்குச் சீட்டைப் பெற்றான். ஜனங்கள் எல்லோரும் கூட்டமாய் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்க, மூல ஸ்தானத்திலே சகரியா தூபங் காட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது தூப வேள்வியின் முன் ஒரு தேவதூதன் மிகப் பிரகாசத்தோடு தோன்றினான். சகரியா அவனைக்கண்டஞ்ச, அத்தூதன், "அஞ்சாதே, அஞ்சாதே, நீ வாழ்ந்து களிப்புறத் தூதனாக வந்தேன். அறமே யுருவெடுத்த பிள்ளை உனக்குப் பிறக்கும். அவனிடத்துக் காணப்படும் குணத்துக் குரிய பெயராக அவனுக்குக் **கருணையன்** என்று நாமஞ் சூட்டுவாய். அவன் அவதரித்து, பாவிகளும் வானுலகடைய, அவர்களை நல்ல வழியில் ஒழுகும்படி செய்வான்" என்றான்.

உடனே மூத்தோனாகிய சகரியா, 'தள்ளாடிய காலத்திலோ எனக்குப் பிள்ளை யுண்டாகும்!' என்று மனதிற்குள் சந்தேகப்பட, தேவதூதன், "நீ உள்ளே சந்தேகப்பட்டமையால் குழந்தையைக் காணுமளவும் ஊமையாயிருக்கக் கடவாய்" என்று கூறி மறைந்து போனான். இக்காட்சி முடிந்த பின் மாதவனாகிய சகரியா ஊமையாய்க் காலங் கழித்து வந்தான். தேவதூதன் சொற்படி எலிசபெத்

அம்மையார் கருப்பமுற்ருர். கருப்பமுற்ற ஆரும் மாதத்தில் ஏசுநாதரும் மேன்மையிற் சிறந்து விளங்கிய மகா பரிசுத்த கன்னியாகிய மரியம்மை இடத்திற் கருப்பமானுர். பின்னர் ஒரு நாள் மரியம்மை புறப்பட்டு, யூதாவிலுள்ள ஒரு பட்டினத்திற்குச் சென்று, சகரியாவின் வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்திஞர்.

இங்ஙனம் சந்தித்து அளவளாவிய பின் மரியம்மை தன் நகருக்குச் செல்ல, எலிசபெத் அம்மையார் இளம்பிறை யொத்த கருணையனைப் பெற்ருர். குழந்தை பிறந்த எட்டாம் நாளில் வேத முறைப்படி செய்யவேண்டிய முறை யாவும் திருந்தச் செய்து, **கருணையன்** என்னும் பெயரிட்டார்கள். உடனே சகரியாவினுடைய நா, கட்டவிழ்ந்து, இறைவனைத் துதிக்க ஆரம்பித்தது. குழந்தை இளவலாயிருந்தாலும் அறிவினலும் ஆற்றலாலும் முதிர்ந்தே தோன்றியது. வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளை பெற்றமையால் பெற்ருேர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்க் குழந்தையைச் சீராட்டி வளர்த்து வந்தனர்.

ஏசுநாதர் மாசற்ற கன்னி மரியம்மையிடத்தில் பெத்லகேம் என்னும் ஊரிற் பிறந்தார். கூற்றினும் கொடியோனுகிய ஏரோது என்னும் அரசன் ஏசுநாதரைக் கொல்லுவதற்குப் பல சூழ்ச்சிகள் செய்தான்; மூன்று வயதுக்கு உட்பட்டிருக்கும் யூதக் குழந்தைகளையெல்லாம் கொல்லும்படி கட்டளை

யிட்டான். ஆதலால் சூசையென்னும் மாதவ முனியும், மரியம்மையும் தம் குமாரனைக் கையில் ஏந்தி எகிப்து நாடு சென்றனர். எலிசபெத் அம்மையாரும் தம் மகனோடு காட்டிற்குச் சென்றார்.

எலிசபெத் அம்மையார் மனித சஞ்சாரமில்லாத ஓர் இருண்ட காட்டிலே சென்று தன் மகனோடு ஒளிந்திருந்தார்; கவலையுற்ற காலத்தில் இறைவனைப் பாடி ஆறுதலோடிருந்தார்; இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் தம் ஆயுள் முடிவை யுணர்ந்தார். அவர் தம் மகனைப் பார்த்து, "நான் பரகதியை யடையப் போகிறேன். உனது நாலாவது வயதில் நானுன்னை விட்டுப் பிரிந்து போகிறேனே யென்று வருந்தவில்லை; அக்கிரம மிக்க மனிதர் துணையினும், காட்டு மிருகங்களின் துணையே பெரிது. உனக்கு உற்றார் பெற்றார் ஒருவருமில்லை" என்றுரைத்துச் சில ஆசியுங்கூறிப் பரலோகம் அடைந்தனர்.

தாயை இழந்த மைந்தர் தவித்துத் துன்பக் கடலில் மூழ்கினர்; தம் தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகளெல்லாஞ் செய்த பின்னர், அவ்வடவியிலேயே துறவியாக இருந்து தவம் புரிந்து வருங்கால், நியாயம் தவறி அநீதி செய்வோரைக் கண்டு இனிய வசனங்கள் சொல்லி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இங்ஙனம் யோர்தான் நதிக் கரையிலிருந்து கொண்டு மக்களை நல்வழியில் செலுத்திய கருணையர், ஏசுநாதருக்கும் ஞான ஸ்நானம் கொடுக்கும் பாக்கியத்தையும் பெற்றார்.

## கேள்விகள்

1. மூலஸ்தானத்தில் சகரியாவுக்குமுன் தோன்றியவர் யார்?

2. சகரியா ஏன் ஊமையானன்?

3. கருணையர் பெற்ற பேறு யாது?

## பயிற்சி

i. கருணையன் என்று நாமம் சூட்டுவாய்.
ii. வானவன் "அஞ்சாதே, அஞ்சாதே."
iii. நீ ஊமையாய் இருக்கக் கடவாய்.

1. இந்த மூன்று வாக்கியங்களிலும் உள்ள வினை முற்றுக்கள் என்ன வினை முற்றுக்கள்?

2. மரியம்மையார் சகரியாவின் வீட்டிற்குள் சென்று எலிசபேத்தை வாழ்த்தினர். இவ்வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகிய இவைகளுக்கு இலக்கணஞ் சொல்லு.

3. வாழ்த்தினர், நவின்றன், கோண்டார், பெற்றார்: இவைகளுக்கு நிகழ் காலமும் எதிர் காலமும் சொல்லு.

4. நேற்றுப் பெய்த மழை.
இன்று பெய்கின்ற மழை.
நாளை பெய்யும் மழை

பெய்த, பெய்கின்ற, பெய்யும் என்ற வினைச் சொற்கள் அர்த்தம் முடியாதவை. ஆதலால் இவைகளை எச்சம் என்று சொல்லுகின்றோம். இங்கே மழையென்ற பெயர்ச் சொல் இவைகளின் அர்த்தத்தைப் பூர்த்தி செய்வதால் இந்த மூன்று எச்சங்களையும் பெயரேச்சங்கள் என்கிறோம்.

## 15. நன்றியுள்ள நாய்

| | | | |
|---|---|---|---|
| தென்னிந்திய ரயில்வே | விண்ணப்பம் | மானேஜர் | மெடல் |
| கௌவிக்கொண்டு | மந்தமாருதம் | குடைந்து | அருகில் |
| மல்லிசாயபு தெரு | சளப் சளப் | பாசஞ்சர் | நெல்லி |
| ஸ்டாப் செலக்ஷன் | செங்குத்து | மகிழ்ச்சி | சந்தை |
| அயரா வுழைப்பு | டெலிகிராபி | மார்வாரி | சேலம் |
| பழனியாண்டி | விளம்பரம் | சம்பவம் | சாட்சி |
| தற்காலிகமாக | சமர்ப்பிக்க | டிராபிக் | வி. பி. |
| நன்னடக்கை | பொம்மை | மயிலம் | பிரீதி |

12, மல்லி சாயபு தெரு,
திருச்சிக்கோட்டை,
6—7—39.

பிரியமுள்ள ராமு,

நீ நாய்களிடத்தில் பிரீதியா யிருப்பவன் என்று எனக்குத் தெரியும். உன் வீட்டிலே வளர்கின்ற நெல்லி என்னும் நாயை நீ எவ்வாறு வளர்க்கின்ருய் என்பதும் எனக்குத் தெரியும். அந்த நாய் ஒரு சிறந்த நாய். முந்தின நாள் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி நான் கூற விரும்புகிறேன்.

நேற்று ஆற்றுப்பக்கமாக நான் உலாவுவதற்குச் சென்றேன். அச்சமயத்தில் ஒரு பெண் குழந்தை ஆற்றின் கரையில் உட்கார்ந்து தன் பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருந்தது. அதன் அருகில் ஒரு பெரிய நாயும் உட்கார்ந் திருந்தது. நான் அவர்களைக் கடந்து சிறிது தூரம் சென்ற பின் ஒரு கீச்சென்ற சத்தமும், சளப் சளப் என்ற நீர்ச் சத்தமும் கேட்

டேன். திரும்பிப் பார்க்க, குழந்தை ஆற்றுக்குள் விழுந்து விட்டதைக் கண்டேன்; உடனே அவ்விடத் திற்கு ஓடினேன். நான் அவ்விடத்தை யடையுமுன் னமே அந்நாய் தண்ணீருக்குள் குதித்து மறைந்தது; சிறிது பொழுதில் குழந்தையை வாயில் கௌவிக் கொண்டு வெளியே தோன்றியது. அது கரையை நோக்கி நீந்திக்கொண்டு வந்தது. கரை செங்குத் தாக இருந்ததால் அந் நாய்க்குக் கால் வைத்து ஏற முடியவில்லை. ஆதலால் நான் அந்தக் கரையின் வழியாகக் கீழே இறங்கி நீரின் அருகிற் சென்று அக்குழந்தையைப் பிடித்தேன்.

இன்னொரு அதிசயமான செயல் நடந்தது. அந்தக் குழந்தையைக் கையில் பிடித்துக்கொண்டு நான் கரைமேல் ஏறும் பொழுது, நான் இன்னொரு சத்தமும் கேட்டேன். திரும்பிப் பார்க்க, நாய் திரும் பவும் தண்ணீரைக் குடைந்து உள்ளே சென்றது. அது என்ன செய்யப் போகிறதென்று நான் அதி சயத்தோடு பார்த்தேன். உடனே அந்நாய் குழந் தையினுடைய பொம்மையை வாயிற் கௌவிக் கொண்டு வெளியே வந்தது; கரையில் ஏறி, நனைந்த பொம்மையைத் தன் கால் பக்கத்தில் போட்டு, உடலைக் குலுக்கி வாலை ஆட்டியது. குழந்தை மகிழ்ச்சியோடு குதித்து அம்பொம்மையை எடுத் தது. அந்நாயினுடைய விசுவாசத்திற்கும் தைரியத் திற்கும் ஒரு மெடல் கொடுக்க வேண்டுமல்லவா?

உன் பிரிய நண்பன்,
சந்திரன்.

## கேள்விகள்

1. நாயினது விசுவாச முள்ள குணம் எவ்வாறு விளங்கும்?

2. நாயினது அறிவு எவ்வாறு விளங்கும்?

3. நாய் தன் எஜமானனிடத்தில் தன் விசுவாசத்தை எவ்விதம் காட்டும்?

## பயிற்சி

1. நாயின் குணங்களைச் சுருக்கிச் சொல்லு.

2. கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள பெயரெச்ச வினையெச்சங்களை எடுத்தெழுது.

(i) அந்த நாய் ஒரு சிறந்த நாய்.
(ii) மந்த மாருதம் மெதுவாக வீசியது.
(iii) அந் நாய் தண்ணீருக்குள் மூழ்கி மறைந்தது.

இது நட்பு முறையில் கடிதம் எழுதும் முறை.

3. தொழில் முறைக் கடிதங்களுக்கும் நட்பு முறையில் எழுதப்படும் கடிதங்களுக்கும் வேற்றுமையுண்டு. தொழில் முறைக் கடிதங்கள் சுருக்கமாகவும், அர்த்த வேறு பாடில்லாதவையாகவும், விஷயத்தை நேரே சொல்லக்கூடியவையாகவும் இருக்கவேண்டும்.

தொழிலில் ஈடுபட்டவர்கள் சுறுசுறுப்பாய் இருப்பார்கள். பெரிய குழப்பமான கடிதத்தை வாசிப்பதற்கு நேரமிருக்காது.

விலாசமும், தேதியும், மேற்கண்ட இரண்டு வகைக் கடிதங்களுக்கும் ஒரே மாதிரியாய்த் தான் எழுத வேண்டும். அவற்றை அடுத்த பக்கத்தில் காண்க.

## 16. கடிதம் எழுதும் முறை

### வியாபாரக் கடிதம்

சேலம்.
மார்ச்சு 2, 1939.

**பழனியாண்டிக் கம்பெனி,**
இரும்பு வியாபாரம், மார்வாரித் தெரு, சென்னை.

**ஐயா,**

தங்கள் விளம்பரத்தை இன்று பத்திரிகையில் பார்த்தேன். தாங்கள் 35 ரூபாய் விலையுள்ள இரும்புக் கட்டில் ஒன்றைப் பாசஞ்சர் வண்டியில் அனுப்பி அதன் ரசீதை வி. பி. மூலமாக எனக்கு அனுப்பவும்.

உங்கள் உண்மையுள்ள,
**சுந்தரன்.**

தொழில் முறை பற்றிக் கடிதங்கள் எழுதப் படும்பொழுது வந்த கடிதங்களின் நம்பரையும், தேதியையும் குறித்துப் பதில் எழுதவேண்டும்.

கீழ்க் காட்டியிருக்கும் மாதிரிக் கடிதத்தைக் கவனி:

திருச்சி,
செப்டம்பர் 2, 1939.

அ. ரா. க. முத்தையா அண்டு கம்பெனி,
சைனா பஜார் ரோடு, மதராஸ்.

**ஐயா,**

தாங்கள் 1939-ஞு ஆகஸ்டு 24-ல் எழுதிய நெ. 1002 கடிதத்தைக் கண்டு நான் இக் கடிதம் வரையலானேன்...............................................

தங்கள் உண்மையுள்ள,

## உத்தியோக விண்ணப்பக் கடிதம்

12, வடக்குத் தெரு, கோவை,
4—3—1939.

தலைவர்,
ஸ்டாப் செலக்ஷன் போர்டு,
தென்னிந்திய ரெயில்வேக் கம்பெனி, திருச்சிராப்பள்ளி.

ஐயா,

'மதராஸ் மெயில்' என்னும் தினசரியில் குமாஸ்தா வேலைக்கு விளம்பரப் படுத்தியபடி என் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

எனக்கு இருபது வயது; சென்னைப் பல்கலைக் கழக பீ. ஏ. பரீட்சையில் முதலாவதாகத் தேறியிருக்கிறேன்; ரயில்வே கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் டிராபிக் அண்டு டெலிகிராபிக் பரீட்சைகளிலும் தேறி இருக்கிறேன்; ஓராண்டு தற்காலிகமாக ஆடிட் டிபார்ட்மெண்டில் குமாஸ்தாவாக இருந்திருக்கிறேன்; அதற்குரிய சாட்சிப் பத்திரத்தையும், எங்கள் கல்லூரித் தலைவர் நன்னடக்கைச் சாட்சிப் பத்திரத்தையும், இதோடு அனுப்பியிருக்கிறேன். நான் குமாஸ்தா வேலைக்குத் தெரிந்தெடுக்கப் படுவேனானால் என் அயரா உழைப்பால் தங்களைத் திருப்தி பண்ணக்கூடுமென்று நிச்சயமாகச் சொல்வேன்.

தங்கள், என்றும் கீழ்ப்படிதலுள்ள,
அப்துல் கனி.

## 17. தேகாப்பியாசம்

(நாடெங்கும் புகழும் என்ற சந்தம்)

இராகம்-கல்யாணி தாளம்-ஆதி

தேகாப்பி யாசம்நாம் செய்திடுவோம்
 தினமும் குளித்துப் புசித்திடுவோம் (தே)

ஆகாரம் ஜீரணம் ஆவதற்கே
 அத்தியா வசியம் இதுவாகும்

அரசனே டேழை அனைவர்க்கும்
 ஆட்சேப மின்றிப் பொதுவாகும் (தே)

ஆடுதல் ஓடுதல் உடம்பிற்கே
 அத்தனைக் கத்தனை சவுக்கியமே

அதிகாலை யந்தி இருவேளை
 ஆங்கோரு மணிநேரம் முக்கியமே (தே)

உணவுதண் ணீர்காற் றுறக்கமிவை
 உடம்புக் கவசியம் கண்டோமே

உண்மையில் அதுபோல் உடற்பயிற்சி
 உடலுக் கேற்றதாக் கொண்டோமே (தே)

உடற்பலம் மனதிற் குறுதி தரும்
 உற்ற நம் ஆயுளும் ஓங்கிவரும்

சாராத நோய்சுகா தாரமதே
 தானே உடல்பெறும் சாரமதே (தே)

# 18. உத்தம நண்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| சின்னுபின்னம் | விளங்கினர் | சோழ நாடு | சகடம் |
| உண்ணுவிரதம் | காட்டரண் | பறம்புநாடு | நீரரண் |
| பெண்ணையாறு | நிலவரண் | ஈந்தோன் | நேர்ந்த |
| வள்ளிக்கிழங்கு | புன்மையர் | வள்ளல் | பாக்கி |
| குறுநிலமன்னர் | மாப்பிள்ளை | தமிழகம் | அவா |
| கல்விச்சாலை | பொற்காசு | தலைநகர் | அமர் |
| போர் செய்து | முற்றுகை | கோய்து | பரிசு |
| திருவாதவூர் | நெற்கதிர் | சேரநாடு | சமர் |

தமிழகத்தில் முடியுடை வேந்தர் மூவரும், சேர சோழ பாண்டிய நாடுகளில் ஆட்சி செய்து வந்தனர். அவருள் அறத்தினும், ஆற்றலினும் குன்றாத பாண்டியர் மதுரையைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அப்பாண்டிய நாட்டிலே திருவாதவூர் என்னும் பதியொன்றுளது. அவ்வூரின்கண் அந்தணர் பெரியார் ஒருவர் தம் மனைவியோடு இல்லறச் சகடத்தை இனிமையாகச் செலுத்தி வருகையில், அவர் ஆற்றிய நோன்பின் பயனாக ஒரு குமாரர் பிறந்தார்; அவருக்குக் **கபிலர்** என்று பெயரிட்டனர்; தவத்தால்பெற்ற குமாரரை நன்றாய்ப் பேணிக் கல்விச் சாலைக்கு அனுப்பிக் கல்வி பயில்வித்தனர். அப்புதல்வர் ஆசிரியரிடத்தில் அன்போடொழுகி, சோம்பல், கலக்கம், மறதி முதலியன இல்லாது உடல் வளர்வதுபோலக் கல்வியிலும் வளர்ந்தார்; கல்வி கற்று முடிந்த பின்னர், பல புண்ணிய தலங்களுக்கெல்லாஞ் சென்று, ஆங்காங்குக் கண்ட

பெரியாரோடு கலந்து, தாம் ஏட்டின் வழியாகக் கற்ற கல்வியை விருத்தி செய்தார்; ஒரு சிறந்த ஆசிரியருக்கு வேண்டிய குணமெல்லாம் ஒருங்கே யமையப் பெற்றார். அவரிடத்தில் வாய்மையும் தூய்மையும் வாய்ந்திருந்தன. ஒழுக்கமும் சிறப்பும் அவரிடத்தில் உயர்ந் திருந்தன.

பண்டைக் காலத் தமிழரசர்கள் புலவர்களை மிகுதியாய் ஆதரித்து வந்ததுபோலக் குறுநில மன்னர்களும் புலவர்க் கீந்து சிறந்து விளங்கினர். அவர்களுக்கு வள்ளல்கள் என்று பெயர். அவருள் வேள் பாரி என்பவன் தன்னேரில்லா வள்ளல்; பறம்பு நாட்டுக்குத் தலைவன்; முல்லைக் கொடிக்குத் தன் தேரை ஈந்தோன். அவனுடைய அரிய செயலைக் கேள்வியுற்ற கபிலர், அவனைப் பார்க்கவேண்டு மென்று விரும்புவாராயினர். அவ்வள்ளலும் கபிலரின் கல்விப் பெருமையைக் கேள்வியுற்றான்; அவரோடு நட்புக் கொள்ள அவா அதிகமுற்றவனானான். கபிலரும் வாதவூரை நீங்கிச் சென்று பாரியைக் கண்டனர்; பெரும் நட்பினராயினர். கபிலர், பாரியின் அரசவையிலிருந்து அவருக்கு உற்ற துணையாய் விளங்கினர். நண்பரும் அமைச்சருமான கபிலரைப் பாரியும் போற்றி வருவானாயினன். அக்காலை, பாரி புலவர்க்கு வழங்கும் வண்மையைக் கண்டு, மனமகிழ்ச்சியால் பாரியைக் கபிலர் புகழ்வாராயினர்.

இவ்வாறு இருக்குங்கால் சில அரசர்கள் ஒருங்கு திரண்டு பாரியினுடைய நாட்டை முற்றுகை யிட்டனர்.

பறம்பு நாடோ நீர் அரணும் நில அரணும் காட்டரணும் கொண்ட நாடு; மக்கட்கு வேண்டிய உணவெல்லாம் தன்னகத்தே கொண்டது. குடிகளோ அரசனிடத்தில் அன்புடையவர்கள். வீரரோ அஞ்சா நெஞ்சம் படைத்தோர்; புறங்காட்டி யோடுவோரல்லர்; வெற்றியையே அணிகலமாகக் கொள்ளுவோர். ஆதலால், எத்தனை படைவரினும் பறம்பு நாட்டைக் கைப்பற்ற முடியாது.

முற்றுகையிட்ட அரசர்கள் வெகு காலம் காத்திருந்தனர்; பறம்பு நாட்டைக் கைப்பற்ற முடியவில்லை. உள்ளிருப்போர் உணவுக்கு வருந்தா வண்ணம் கிளிகளை வளர்த்து, அவைகள் வெளிநாடு சென்று நெற்கதிர்களைக் கொய்துவருமாறு பயிற்றி, குடி, படைகளைக் காப்பாற்றி வந்தனர். பலாப்பழம், வள்ளிக்கிழங்கு முதலியன உணவாக அமைந்தன. உணவுக் கவலை இல்லா உத்தம வீரர் பகைவரோடு போர் செய்து வந்தனர். பாரியும் பகைவர் மீது விழுந்து அவர்களைச் சின்னபின்னப் படுத்தினன். கபிலர், முற்றுகையிட்ட வேந்தரைப் பார்த்து, "நீங்கள் எத்தனைவிதப் போர் செய்தாலும் இந் நாட்டைக் கைப்பற்ற முடியாது. அமரால் முடியாத இச்செயலை ஒரு வழியால் அடையலாம். நீங்கள் பாடல் பாடிக் கொண்டு வந்து பாரியிடத்தில் நாட்டைக் கேட்பீர்களானல் அவன் உங்களுக்கு நாடும் நகரும் நல்குவன். ஏற்கனவே, அவனுடைய ஊர்களை யெல்லாம் பாடி வந்தோர் பரிசு பெற்றனர். மலை மாத்திரம் உள்ளது.

நீங்கள் பாடிக்கொண்டு வந்தால் அதையும் அவ் வள்ளல் உங்களுக்குத் தருவான்" என்று கூறினர்.

வஞ்சக அரசர்களாகிய அம்மூவரும் வஞ்சனையால் பாரியைக் கொன்றனர். ஆதலால் ஏழைகள் ஏங்கி யழுதனர். புலவர் புலம்பி யழுதனர். உயிர் நண்பரான கபிலரின் செயலை நாம் சொல்ல வேண்டிய தில்லை. சமரில் சாயாது சதியில் மாய்ந்த பாரியின் பின்னே பார்புகழ் கபிலரும் மாய்ந்துவிடத் துணிந்தனர். எனினும், தன் குழந்தைகளைக் காப்பதற்கு அவர் உயிரைத் தாங்கியிருக்க வேண்டுமென்று பாரி வேண்ட, கபிலரும் தம்முயிரை விடாதிருந்தனர்.

காவலனிறந்த துன்பம் வாட்டக் கபிலர் பாரியின் பெண்களைக் கூட்டிக்கொண்டு மாப்பிள்ளை பார்க்கச் சென்றனர். வாழ்ந்தவர் தாழ்ந்தால் எவர் மதிப்பார்? கபிலர் பல அரசரிடத்திற்சென்று இப்பெண்களைக் கொள்ளுமாறு இரப்பார் போன்று அவர்களைக் கெஞ்சினர். பலர் அப்பெண்களை மணக்க மனம் இசைந்திலர்.

கபிலர் அப்பெண்களை மறையோரிடத்தில் அடைக்கலமாக வைத்துச் சேர அரசனிடத்திற் சென்று, அவனைப் பற்றிப் பாடிப் பொற்காசுகள் பரிசு பெற்று, பாரி மக்களிடம் வந்தார்; பின்னர் திருக்கோவலூரை யடைந்து, ஓர் இளவரசனுக்கு அம் மகளிரை வாழ்க்கைப் படுத்தினர்.

பாரி பிரிந்த பிரிவால் துன்புற்ற கபிலர், "பாரி, நீயும் நானும் நேர்ந்த நட்புடையரா யிருந்தோம். ஆனல் நீயோ என்னைவிட்டுச் சென்றனை. நானும் உன்னோடு வருகின்றேன்" என்று பெண்ணையாற்றின் நடுவில் உண்ணு விரதம் இருந்து உயிர் துறந்தார்.

## கேள்விகள்

1. கபிலரிடத்தில் எப்படிப்பட்ட தீய குணங்கள் இல்லை?
2. வேள் பாரியின் ஈகையை விளக்கு.
3. முற்றுகையிட்ட மூவர்க்கும் கபிலர் என்ன கூறினர்?
4. கபிலர், பாரி இறக்கத் தாமும் ஏன் இறக்காது இருந்தார்?
5. பாரி இறந்த பின்னர், கபிலர் அவனுடைய பெண்களின் மணத்திற்காக என்ன முயற்சி யெடுத்தார்?
6. அம்முயற்சியின் பயன் என்ன? கடைசியாகக் கபிலர் எங்கு சென்று பாரி மக்களின் மணத்தை முடித்தார்?

## பயிற்சி

1. மகன், ஆசிரியர், வள்ளல்கள், பெண்கள்: இச் சொற்கள் என்ன பால்கள்?
2. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குத் தக்க சொற்களைப் பொருள் கெடாது அமைத்து எழுது:—

(i) பறம்பு நாட்டுத் **தலைவன்**.

(ii) அவ்வள்ளலும் கபிலரின் கல்விப் பெருமையைக் **கேள்வியுற்றான்**.

(iii) குடிகளோ அரசன் இடத்தில் அன்பு **உடையவர்**.

3. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயரெச்சம் வினையெச்சங்களைச் சொல்லுக:—

(i) வீரரோ அஞ்சா நெஞ்சம் உடையவர்.
(ii) அவர் புறங்காட்டி யோடுவாரல்லர்.
(iii) கபிலர் வாதவூரை நீங்கிச் சென்று பாரியைக் கண்டனர்.

4. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்து எழுது:—

(i) மனிதர்கள், நாற்காலி, மேஜை முதலியவற்றைச் செய்கிறார்கள்.
(ii) ஒரு பெரிய புயல் காற்று கப்பலை அலைத்தது.
(iii) இந்தப் புத்தகத்தை எனதண்ணன் கொடுத்தான்.
(iv) சர்க்கஸ்காரன் இக்குதிரையைப் பழக்கினான்.
(v) அவன் தந்தை அவனை மன்னிப்பான்.
(vi) எலியின் பின்னே பூனை ஓடியது.
(vii) இப்படி ஏன் உன் தகப்பனார் கடிதம் எழுதினார்?

5. இரண்டு வாக்கியங்களையும் ஒன்றாய்ச்சேர்த்து எழுது:—

(i) நான் பொய் சொல்கிறவனல்ல. நான் கோழையல்ல.
(ii) என்னிடத்தில் பணம் இல்லை. என்னிடத்தில் நிலம் இல்லை.
(iii) நாங்கள் ஒப்புக் கொள்கிறதில்லை. நாங்கள் மறுக்கிறதில்லை.
(iv) அவனை மன்னிக்க முடியாது. அவனை மறக்க முடியாது.

## 19. தளவாய் அரியநாத முதலியார்

| | | | |
|---|---|---|---|
| கிருஷ்ணதேவராயர் | தக்ஷிண நாடு | காஞ்சிபுரம் | குறும்பன் |
| சிலம்ப விளையாட்டு | குடிகொண்டு | நிருமாணம் | சுக்கிரன் |
| மண்டலேசுவரன் | கனகதண்டி | மைதானம் | தளவாய் |
| ரேகை சாஸ்திரம் | சமஸ்தானம் | உக்கிராணி | சந்திரன் |
| சேட்டைக்காரன் | பிரதிஷ்டை | கரிக்குருவி | சிவிகை |
| ராணுவப்பட்டம் | தாமிரபரணி | ஆசிமொழி | அதிர்ச்சி |
| சோழ ராஜதானி | அக்கிரகாரம் | குற்றேவல் | ஆருடம் |
| பஞ்சபாண்டியர் | ஸ்தாபித்தார் | சோரபயம் | அலைந்து |
| ஆஞ்ஞாசக்கரம் | இல்லாமை | கடாட்சம் | தகராறு |
| மகாராயல்காரு | ராஜயோகம் | கடைவீதி | பாங்கர் |
| ராஜாதிராஜன் | சோபிப்பாய் | சோதிடம் | விருது |
| படிப்படியாக | எழுத்தாணி | சான்றோர் | தாள் |
| அலங்கோலம் | முழக்கோல் | சிலம்படி | நலிய |
| நீர்ப்பாசனம் | கைச்சாத்து | கருநாகம் | சீட்டு |
| ராஜபோகம் | கலிங்கநாடு | சந்தேகம் | நட்பு |
| விஜயநகரம் | அரியநாதர் | பரிகாசம் | |

வாழ்க்கையில் பேரும் புகழும் கீர்த்தியும் நாட்டும் இயல்புடையோர் பெரும்பாலும் எளிய குடும்பத்தில் தோன்றுவர். தளவாய் அரியநாத முதலியாரும் எளிய குடும்பத்தில் பிறந்தவரே. இவர் ஒரு காலத்தில் சோழ ராஜதானியில் ஒன்றாக விளங்கிய காஞ்சிபுரத்தி னருகே மெய்ப்பேடு என்னும் ஊரில் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். இவரது முன்னோர் நமது நாட்டு அரசரது ஆட்சியிலே உயரிய அலுவல்களில் அமர்ந்து பல விருதுகள் பெற்று விளங்கினவர்கள் என்று சொல்லப்

படுகிறது. எனினும் இவர் பிறந்த குடும்பத்திலே தரித்திரம் குடிகொண் டிருந்தது. இவர் எந்த வருஷத்தில் பிறந்தார், எந்த வருஷத்தில் இறந்தார் என்பது தெரியவில்லை.

இவர் பால்மண மாருப் பாலகனு யிருக்கும்போது, இவரது தாயார் இவரைப் பாயில் கிடத்திவிட்டுத் தண்ணீர் கொண்டுவரப் போயினர். அச்சமயம் ஒரு கருநாகம் இவரை வளைத்துப் படமெடுத்து நின்றது. தாயார் இதைக்கண்டு வெளியில் வந்து கூச்சலிட, அப்பாம்பு பிள்ளையைத் தீண்டாதகன்றது. இதைக் கேட்ட சில பெரியோர், "இப்பிள்ளை பிற்காலத்தில் பெரும் பதவி பெற்று வாழ்வான்" எனக் கூறினர். பெற்ருேரும் இவரைமேன்மையாகவே மதித்து, கல்வி பயிற்றுவித்தனர். இவர் சிறு பிள்ளையா யிருக்கும்போதே கணிதத்தில் தம் திறமையைக் காட்டி வந்தார். விளையாட்டிலும் மற்போரிலும் விற்போரிலும் சிலம்ப விளையாட்டிலும் இவரை ஒத்தவர் எவரும் இருந்திலர். இவரை எதிர்ப்போரெல்லாம் புறங்காட்டியோடுவர். இவர் ஊரின் மைதானத்தில் ஒருநாள் சாயந்திரம் தம் தோழருடன் விளையாடிக் கொண் டிருந்தார். அப்பொழுது ஒரு பெரியார் அவ்வழியாய்ச் சென்ருர். அவர் சோதிடம், ஆரூடம், ரேகை சாஸ்திரம் முதலியவற்றில் கை தேர்ந்தவர். முதலியாருடைய சிலம்படியை அவர் கண்டு வியந்து, அவர் பக்கத்தில் சென்று, "உன் கையை நீட்டு, ரேகையைப் பார்ப்போம்" என்று கேட்டார்.

அரியநாத முதலியார் பெரியோரிடத்தில் மிகவும் வணக்கமாய் நடந்துகொள்பவர். அப்பெரியார் விரும்பியவாறு அவர் தமது கையைக் காட்ட, அச்சாஸ்திர நிபுணர், "நீ சாதாரணமான மனிதனல்ல. உனக்குச் சிரேஷ்டமான ராஜயோகமும் ராஜபோகமும் இருக்கின்றன. நீ இக் குக்கிராமத்தை விட்டு நீங்கி, மகாராஜாதி ராஜா மண்டலேசுவரரான ராயரின் சமஸ்தானத்தை யடைவாய். நீ பெரும் மண்டலேசுவரனைச் சோபிப்பாய். அக்காலத்தில் நானாவது என் பிள்ளையாவது வந்தால் மறக்கக்கூடாது. சமஸ்தானத்தை யடைந்த கொஞ்ச காலத்திற்குள் சுக்கிரன் உன்னைப் பார்ப்பான்" என்று சொன்னார். அரியநாத முதலியார், "நான் ராஜ பதவியை யடைந்தால் உங்களை மறக்க மாட்டேன்; இதோ நிற்கும் இவ்வளவு பேர் முன்பு ஆணையிட்டுக் கூறுகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட பெரியார் எழுத்தாணியைக் கையில் கொடுத்து ஒரு பனை யோலையைக் காட்டி, "நான் சொல்லுகிற பிரகாரம் இச் சீட்டில் எழுதி, உனது கைச் சாத்திட்டுக்கொடு; இச்சீட்டை யார் உன்னிடம் கொண்டு வந்து கொடுக்கிறார்களோ அவர்களுக்கு உனக்கு வரும் செல்வத்தில் கால் வாசி கொடுக்க வேண்டும்" என்றார். அரியநாதர், "தாங்கள் ஊர்ப் பெயரைக் குறிப்பிடவில்லையே!" என்று கேட்க அருகில் நின்ற குறும்பன் ஒருவன், "தாம் சொன்ன குறி பொய்யாய்ப் போனால் எல்லோரும்

பரிகாசம் பண்ணுவார்களே என்ற பயம் போலிருக்கிறது'' என்று ஏளனம் செய்தான். மீண்டும் அச் சேட்டைக்காரன், "சுவாமிகாள், குறி பலியாவிட்டால் அரியநாதத்திற்கு என்ன பதில் கொடுப்பீர்கள்?'' என்று வினவ, அப் பெரியார் "என் தரித்திரம் முழுவதையும் கொடுத்து விடுகிறேன். ஏன் இந்தச் சந்தேகம்? குறி நிச்சயமாய்ப் பலிக்கும்'' என்று சொல்லிக்கொண்டு அரியநாதர் எழுதிக் கொடுத்த சீட்டைத் தன் வேஷ்டியில் முடிந்து வைத்துக் கொண்டு போய்விட்டார்.

நிற்க, வறுமையால் குடும்பம் நலிவுறுவதைக் கண்ட அரியநாதர் விஜயநகரம் செல்வதற்காகத் தெலுங்கு பாஷையைப் படிக்கத் தொடங்கினர். அவ்வளவு நெடுந் தூரம் மகனை யனுப்பப் பெற்றோர் இணங்காவிட்டாலும், இல்லாமையும் சோதிடமும் தூண்ட, முடிவில் அரியநாதரைத் தெலுங்கு நாட்டிற்கு அனுப்பத் தீர்மானித்தனர்.

பெற்றோர்களுடைய ஆசிமொழிகளையும், புத்திமதிகளையும் ஏற்றுக்கொண்டு அரியநாதர் சென்றனர். "வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம் போனல் கால் நடையாய்ச் சென்றவர்கள் கனக தண்டி யேறுவரே'' என்றது போல இவர் போகும் போது, கரிக்குருவி வலமிருந்து இடஞ் சென்றது.

இன்னலும் இடையூறும் உற்ற அரியநாதர் விஜய நகரத்தை யடைந்து, நாகம நாயக்கரிடம்

கணக்கப் பிள்ளையாய் இருந்தார். நாகம நாயக்கர், சமஸ்தானத்தில் உக்கிராணி வேலையிலிருந்தார்; பின் படிப்படியாக உயர்ந்து சேனைத் தலைவராய் அமர்ந்து தக்ஷிண நாடுகளுக்கு மண்டலேசுவரராக விளங்கினர். அவருக்கு விசுவநாதன் என்ற ஒரு மகன் இருந்தான். நாகம நாயக்கர் தமது மைந்தனுக்குத் தம் உத்தியோகத்தை வாங்கித் தர முயன்றார்; தம் மகனது பதினைந்தாவது வயதிலேயே அரசருக்குக் குற்றேவல் செய்யத் தம் மகனை நியமித்தார். விசுவநாதர் தம் சமர்த்தால், கண்டோர் அரசனது மகனே வென்று மருளும்படி விளங்கினர். விசுவநாதரோடு அரியநாதர் வேலைத் திறத்தாலும், நல்லொழுக்கவுயர்வாலும், நாகம நாயக்கரின் நன்மதிப்பைப் பெற்றதுமல்லாமல் ராயரின் கடாட்சத்தையும் அடைந்தார்.

ஒரு நாள் அரியநாதர் தம் எஜமானருடன் மகாராயரின் சபைக்குச் சென்றார். அக்காலை, அருங்கலை விநோதரும், மந்திரி, பிரதானிகளும் மலிந்து விளங்கிய அச்சபையிலே சந்திரன் போன்று விளங்கிய கிருஷ்ண தேவராயர், "இன்று காலை அரண்மனைத் தடாகத்தில் நீராடச் சென்றோம். அப்பொழுது ஒரு சாண் நீளமில்லாத முக்கால் சாணுள்ள தாமரை மொட்டொன்று தாள் முழுவதும் தண்ணீருக்குள் இருக்க, மொட்டு மட்டும் நீர்மட்டத்திற்கு மேலாக நின்றது. நாம் தடாகத்திற்குள் குதித்தவுடன் அதன் அதிர்ச்சியால் அந்த மொட்டுச்

சிறிது தூரம் பின்சென்றது. சென்ற தூரம் நான்கு சாண் இராது. மூன்றே முக்கால் சாண் என்று கூறலாம். பின்னர் அதன் தலை நீர் மட்டத்திற்கு நின்று, தண்ணீர்க்குள் மறைந்து விட்டது; அது நின்ற இடத்திலே அத் தடாகத்தின் ஆழம் என்ன?'' என்று அச்சபையோரைப் பார்த்துக் கேட்டார்.

அதைக் கேட்டோர் பதில் சொல்ல முடியாது நின்றனர். அப்பொழுது அரியநாதர், "மகாராயல் காரு உத்தரவு அருள்வீராஞல் அடியேன் அதற்குப் பதில் சொல்லுகிறேன்'' என்று பக்தியோடு கூறினர். **கிருஷ்ண தேவராயர்**, அவரை அரியணையி னருகில் வரச்சொல்ல, அவர் வந்து, "தடாகத்தின் ஆழம் விசுவநாத நாயக்கர் உயரம்'' என்று பக்தி வினயத்தோடு பதிலளித்தார். உடனே அவ்வரசர், "விசுவா, உன் உயரமென்ன?'' என்று கேட்க, விசுவநாதர், "ஒன்பது சாண்'' என்றார். பின்னர் அரசரது ஆணைப்படி ஒருவன் தடாகத்திற்குச் சென்று, முழக்கோலால் அளந்து பார்க்க, அது ஒன்பது சாண்தான் இருந்தது.

அரசர் பெரு வியப்புற்று, அரியநாதரைப் பார்த்து "விசுவநாதனுடைய உயரத்தை எவ்வாறு அளந்தாய்?'' என்று கேட்க, **அரியநாதர்** வணங்கி, "அடியேன் கண்ணாலே அளந்தேன்'' என்றார். அன்று முதல் அரசர் அரியநாதரை அரண்மனை யிலே சேவகத்தில் அமர்த்திக்கொண்டார். சமஸ்

தானத்தில் உத்தியோகம் பெற்ற அரியநாதர் தம்முடைய கூரிய மதியால் மகாராஜாவினுடைய நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்துவந்தார். அக்காலத்தில் கலிங்க நாட்டிலும் ராய்ச்சூர் பக்கத்திலும் சிற்றரசராலும் முகமதியராலும் கலகங்கள் நேர்ந்தன. அவற்றை அடக்குவதற்கு அரியநாதரும் மகாராயருடன் சென்றார்; அப்பொழுது போரில் தம்முடைய வீரத்தையும், ஆற்றலையும் மெய்ப்பித்து, மந்திரி சபையில் ஒரு முக்கிய மனிதரானார்; முதலியார் என்ற ராணுவப் பட்டத்தையும் பெற்றார். சிவிகையேறும் உரிமையும் இவருக்கு அளிக்கப்பட்டது.

நிற்க, தமிழ் நாட்டு மன்னர்கள் விஜயநகர அரசர்களின் மேற்பார்வையில் தங்கள் நாடுகளை ஆண்டு வந்தனர். இவர் காலத்தில் சோழனுக்கும் பாண்டியனுக்கும் தகராறு ஏற்பட்டது. பாண்டியனுக்கு உதவியாக நாகம நாயக்கரை யழைத்துத் தென்னாட்டை ஒழுங்கு படுத்தி வரும்படி ராயர் அனுப்பினார்; நாயக்கர் தென்னாடு வந்து கலகத்தை யடக்கி, மகாராயர் உத்தரவுக்கு விரோதமாக அந் நாட்டை ஆண்டு வந்தார். பாண்டிய மன்னன் பரதேசிபோல் அலைந்து, நாகம நாயக்கரைப் பற்றி ராயரிடத்தில் முறையிட்டுக் கதறினான். ராயர் கோபமுற்று, நாகம நாயக்கரது குமாரரான விசுவநாதருக்கு அவரது தகப்பனைப் பிடித்து வருமாறு பணித்தார்; அவருக்குத் துணையாக அரியநாதரையும் உடன் அனுப்பினார்.

தென்னாடு வந்த இரு வீரரும் நாகம நாயக்கரோடு அமர் புரிந்து அவரை வென்றனர். பின் நாகம நாயக்கரைச் சமஸ்தானத்திற்கு அனுப்பி விட்டு இருவரும் சேர்ந்து தென்னாட்டை ஆண்டனர். அலங்கோலப்பட்டுக் கிடந்த பாண்டி நாட்டை அரியநாதர் சீர்திருத்தினார்; கள்வர்களைத் தம் ஆஞ்ஞா சக்கரத்திற் குட்படுத்தித் தண்டித்துச் சோர பயத்தை அறவே களைந்தார்; காவிரியாற்றின் இரு பாங்கருமுள்ள அடவிகளை யழித்து, நீர்ப்பாசன வசதிகளை யேற்படுத்தினார்; கோவில்கள் கட்டிப் பிரதிஷ்டை செய்தார்; திருச்சிராப்பள்ளியில் அரண்மனையும், பல கடை வீதிகளையும் நிருமாணஞ் செய்தார்; தம்மோடு போர் புரிந்த பஞ்சபாண்டியரை அடக்கினார்; திருநெல்வேலியில் ஆயிரக்கால் மண்டபம் கட்டினார்; தாமிரபரணியின் இரு கரைகளையும் செப்பனிட்டு, சோலைகளும் அக்கிரகாரங்களும் செழிக்கும்படி செய்தார்; அமைதி நீடிக்கும் பொருட்டுப் பாளையப்பட்டுகளை ஸ்தாபித்தார்; அவைகளுக்குப் பாளையக்காரர்களைக் காவலாக்கினார்; சிற்றூர்களில் ஊர்க் காவல் முறையை ஏற்படுத்தினார்; இவ்விதமாக நாட்டை ஒழுங்கு செய்து வந்தார்.

### கேள்விகள்

1. அரியநாதர் பாலகனா யிருக்கும் போதே அவர் பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்று விளங்குவார் என்பதை அறிவித்த சம்பவம் யாது?
2. அரியநாதரைக் கண்ட பெரியார் என்ன சொன்னார்?

3. அரியநாதர் யாரால் நன்கு மதிக்கப்பெற்றார்?

4. அரியநாதர் என்ன பதவியை அடைந்தார்?

5. அரியநாதர் நெல்வேலிச் சீமையை எவ்வாறு சீர் திருத்தினர்?

6. அரியநாதர் பாலகனாக இருக்கும்போதே அவர் பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்று விளங்குவார் என்ற பெரியாரைப் பார்த்து அரியநாதர் என்ன பதில் கூறினர்?

## பயிற்சி

1. வாழ்க்கையில் பேரும் புகழும் கீர்த்தியும் நாட்டும் இயல்புடையோர் பெரும்பாலும் எளிய குடும்பத்தில் தோன்றுவார்கள்.

இவ்வாக்கியத்திலுள்ள இடைச் சொற்களை எடுத்து எழுதுக.

இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலையை எடுத்து எழுதுக.

2. தடித்த எழுத்திலுள்ள சொல்லுக்குப் பதிலாக வேறு சொல் அமைக்க:—

சுமார் நானூறு **ஆண்டுகளுக்கு** முன்னே பிறந்தார்.

3. இச்சொற்றொடர்களைப் பிரித்துக்காட்டு:—

ராஜயோகம், ஆயிரக்கால், ஆஞ்ஞாசக்கரம்.

4. சாத்தன் வந்தான்.
எருது வந்தது.
சாத்தன் : இது என்ன திணை ?
எருது : இது என்ன திணை ?
சாத்தனும் எருதும் வந்தார்கள்.
இது என்ன திணை? என்ன எண்? என்ன பால்?

உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் ஒரு வாக்கியத்தில் எழுவாயாக வந்தால் பயனிலை உயர்திணைப் பலர்பால் வினைமுற்றாகவே இருக்கும்.

நீ வந்தாய், நாய் வந்தது.

இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து எழுதுக.

1. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களை இன்ன வினைச் சொற்கள் என்று சொல்:—

(i) அக்குள்ளன் 'இதற்காக வருந்தாதே. நீ வீட்டிற்குத் திரும்பும் பொழுது எதிர்ப்படும் பொருளைத் தரவேண்டும்' என்றான்.

(ii) தந்தாய், உனது வாக்குறுதிகளைப் பற்றிக் கவலையுறவேண்டாம்.

(iii) நீ என்னை இரட்சிக்கத் தோன்றினை.

2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள வேற்றுமைகளைக் கூறுக:—

(i) பின்னர் உயிரளிக்கும் நீரை உன் மீது தெளித்து மீண்டும் உயிருடன் இருக்கும்படி செய்வேன்.

(ii) அவன் பொன்மலைக்கு அரசனானான்.

3. (i) இராமனும் இலக்குமணனும் காட்டிற்குச் சென்றனர்.

(ii) இது மரத்தால் செய்யப்பட்ட குதிரை.

(iii) அதோ காணும் உரு மனிதன் தான்.

இவ்வாக்கியங்களிலுள்ள உம், ஆல், அதோ என்பவைகள் இடைச் சொற்களாகும். இப்பாடத்தில் வந்துள்ள இடைச் சொற்கள் ஐந்து எழுது.

# 20. நம்நாட்டு விஞ்ஞானிகள்

| | | |
|---|---|---|
| விஞ்ஞான விருத்திக்கழகம் | விஞ்ஞான மகவு | நறுமணம் |
| சர். ஜெகதீச சந்திரபோஸ் | வித்தியாசாகரர் | நானிலம் |
| அரசாங்க உத்தியோகஸ்தர் | வியக்கத்தக்க | மாணவர் |
| பொருள்நூல் பேராசிரியர் | வங்கத்தங்கம் | நரம்புயிர் |
| இந்து ரசாயன சரித்திரம் | நோபல் பரிசு | முக்கர்ஜீ |
| பார் மேடிக்கல் ஒர்க்ஸ் | கவர்கின்றன | விளங்கி |
| ராஜதானிக் கல்லூரி | சௌக்காரம் | புதுமை |
| பெங்கால் கெமிக்கல் | வியக்குமாறு | விந்தை |
| புரபல்ல சந்திர ராய் | விலங்குகள் | விருத்தி |
| சென்னை ராஜதானி | கந்தமூலாதி | ஆய்ந்து |
| விஞ்ஞானப் புலவர் | கனவுலகு | இயல்பு |
| விஞ்ஞான உலகம் | புலவோன் | நாவலர் |
| நவீன விஞ்ஞானம் | இரகசியம் | கழகம் |
| ஆராய்ச்சி மன்றம் | விஞ்ஞானி | புலவர் |
| இந்திய ஆராய்ச்சி | புல்பூண்டு | குழாம் |
| உலகப் பிரசித்தி | அருங்கலை | நவில |
| ரசாயனச் சபை | கல்கத்தா | சாலை |

நமது தேசத்தில் நவில முடியாப் பெருமை பெற்ற நாவலர் பலர் தோன்றினர். இயற்கையை ஆய்ந்து எளிதில் வெளியிடும் இயல்பு வாய்ந்த விஞ்ஞானிகள் தோன்றினர். தற்கால உலகம் விஞ்ஞான உலகம் என்று கருதப்படுகிறது. இவ் விஞ்ஞான உலகில், வேடிக்கையாக நினைக்கும் வியக்கத்தக்க பொருள்களும், கனவுலகில், காண்கின்ற பொருள்களும் நம் முன்னே காட்சி யளித்து, நமது கண்களைக் கவர்கின்றன. இவை எல்லாம் மேல்

நாட்டு விஞ்ஞானியர் கண்ட விந்தையாம். நம் நாட்டினுள்ளும் சிறந்த புலவர்கள் மூவர் தோன்றினர். அவர்கள் தாம் கண்ட விஞ்ஞான உண்மையை உலகத்தில் விருத்தி செய்து புகழ்பெற்று விளங்கி நின்றனர்.

வங்காளத்தில் தோன்றிய சர். ஜெகதீச சந்திர போஸ் என்பவர் தமது விஞ்ஞான அறிவின் திறத்தால் உலகம் வியக்குமாறு செடி, கொடி, புல், பூண்டுகளுக்கும் விலங்குகளுக்கும் ஒரே தன்மையான நரம்புயிர் இருக்கின்றனவென்று கூறினர். விஞ்ஞானப் புலமையின்மேன்மையுற்றெழுந்த இவ் வித்தியாசாகரர் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று கல்கத்தாவில் நிறுவி, இந்திய ஆராய்ச்சி யோங்கி வளர முயற்சித்தனர். ஆகையால் ஆராய்ச்சியில் விருப்புற்ற பல மாணவர் இவ் அருங்கலை வித்தைரிடம் சென்று, விஞ்ஞான ஆராய்ச்சி நடத்தினர். அம்மாணவரோடு இவர் செடி கொடிகளைப் பற்றியும், அவைகளின் வாழ்வைப் பற்றியுமுள்ள இரகசியங்களை யொன்றின் பின் ஒன்றாகக் காட்டினர். இவ் வங்கத் தங்கத்தை இந் நானிலத்திலுள்ள நவீன



சர். ஜெகதீச சந்திர போஸ்.

விஞ்ஞானப் புலவர்கள், "பெரிய விஞ்ஞானி" யென்றும், "விஞ்ஞானப் புலவோன்" என்றும் கொண்டாடுகின்றனர்.

வங்க நாட்டின் பெரும் புகழ் எங்கும் ஓங்க, அந்நாடு மற்றொரு விஞ்ஞான மகவை ஈன்றது. அவர் பெயர் டாக்டர் பிரபுல்ல சந்திர ராய். இவ் விஞ்ஞானியும் போஸைப் போலவே பெரும் புகழ் எய்தினர். ரசாயனச்சபையில் தம் ஆராய்ச்சியின் புகழை நிறுத்தினர். இவர் சந்திர போஸைப் போல இந்தியாவில் ஆராய்ச்சி மன்றம் அதிகரிக்க அரும் பாடுபட்ட பெரியோராவர். இவர் "பெங்கால் கெமிகல் பார்மெடிகல் ஒர்க்ஸ்" என்னும் சாலையை நிறுவி,



டாக்டர் பிரபுல்ல சந்திர ராய்

அநேக அருங்கலை மாணவரைத் தம்மிடம் சேர்த்தனர். இம் மாணவக் குழாத்தினோடு சேர்ந்து இவர் புகுந்த ஆராய்ச்சிக் கழகத்தில் அநேக பெரிய புதுமைகள் கண்டனர். இவரது சாலையில் பல வாழ்க்கைப் பொருள்கள் உற்பத்தி யாகின்றன. சௌக்காரம், நறுமணம் வீசும் பலவகை எண்ணெய்கள், கந்தமூலாதிகளாலாகிய மருந்துகள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டு, நம் நாட்டில் பல விடங்

களுக்கும் அனுப்பப் படுகின்றன. இவர் கண்ட புதுமையும், 'இந்து ரசாயன சரித்திர வரலாறு' என்ற நூலும் பிற நாட்டினர் இந்தியாவை மதிக்குமாறு செய்தன.

வங்கத்தைப் போன்றே சென்னை ராஜதானியிலும் ஒரு விஞ்ஞானப் புலவர் தோன்றினர். சென்னை ராஜதானிக் கல்லூரியில் மாணவராயிருக்கும் பொழுதே, சர். சந்திர சேகர வெங்கட்ராமன் என்பவர் விஞ்ஞானப் புதுமை காணும் வித்தையில் சிறந்து விளங்கினர். பிற் காலத்தில் அரசாங்க உத்தியோகஸ்தராகக் கல்கத்தா ஏகினர். ஆங்கும், தம் விஞ்ஞானப் பயிற்சியைக் கைவிட்டவரல்லர்; இந்திய விஞ்ஞான விருத்திக் கழகத்தில் பல ஆராய்ச்சிச் செயல்களை ஆராய்ந்து காட்டினர். அக்காலத்தில் இவர் சர். ஆஸ்தோஸ் முக்கர்ஜி என்பாரோடு ஒருமைப்பட்ட நண்பராகி வாழ்ந்தார். அப்போது கல்கத்தாவிலுள்ள பல்கலைக்கழக விஞ்ஞானக் கல்லூரியில் பொருள் நூல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அவருடைய திறமையால் கல்லூரி பெரும் புகழ்பெற்று விளங்கியது. ஆராய்ச்சி நோக்க



சர். சி. வி. ராமன்

முள்ள மாணவர் பலர் அங்கே கூடினர்; அவருடன் சேர்ந்து அநேக விந்தை கண்டனர். அவர் நோபல் பரிசு என்னும் பிரசித்திபெற்ற பரிசு பெற்றார்.

## கேள்விகள்

1. வங்கத்தில் தோன்றிய விஞ்ஞானப் புலவர் யார்?
2. சந்திர போஸ் கண்ட புதுமை யாது?
3. இந்தியாவின் ஆராய்ச்சித் திறன் ஓங்க அவர் என்ன செய்தார்?
4. சர். ஜெகதீச சந்திர போஸை நவீன விஞ்ஞானப் புலவர்கள் எப்படிக் கொண்டாடுகின்றனர்?
5. ராய் என்பவர் எந்தச் சபையில் புகழ் பெற்றார்?
6. அவர் நிறுவிய தொழிற்சாலையின்பெயர் என்ன?
7. சென்னை ராஜதானி தோற்றுவித்த விஞ்ஞானப் புலவர் யார்? அவரால் எக்கல்லூரி புகழ் பெற்றது?
8. சி. வி. ராமன் என்ன பரிசு பெற்றார்?

## பயிற்சி

1. விரித்துக்காட்டு:—

பொருணூல், பேராசிரியர், அறிவியற் புலவர்.

2. அவர் நோபல் என்னும் பிரசித்திபெற்ற பரிசும் பெற்றார்; இவ்வாக்கியத்திலுள்ள பெயரெச்சங்கள், வினைமுற்று ஆகிய இவைகளை எடுத்து எழுது.

3. நாவலன்: இதற்கு மற்ற வேற்றுமைகளைக்கூறு.

4. கீழே வரும் வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கு சொற்களையும் எடுத்து எழுது.

கண்ணன் கருணையையும் அர்ச்சுனன் வீரத்தையும் அவர்கள் செயல்களே நனி விளக்கும்.

## 21. மாணவர் ஊக்கம்

(மன்னு புகழ் என்ற சந்தம்)

இராகம்-தேசிக பியாக் தாளம்-ஆதி

மாணவரே ஊக்கம் என்று
வழுத்து மிந்தப் பாடம்—இதை
மறவாமல்நம் மனதில் வைத்து
வாழ் வதுவி சேடம் (மா)

காணவரும் செல்வம் கோடிக்
கணக்குட னிருந் தாலும்—அதைக்
காக்க நமக்கு ஊக்கமன்றே
கண்க ளிரண்டு போலும் (மா)

ஊக்கமின்றி ஒன்று மில்லை
உயிர்ப் பிராணி எதற்கும்—இந்த
உளவறிந்தால் நலம னைத்தும்
உடன் பிறந்து சிறக்கும் (மா)

ஆக்கத் திற்கே அடிப்படையாய்
அமைவ தூக்க மாகும்—இதை
அறியாவிட்டால் பிறகிங் கென்னே
அந்தோ மானம் போகும் (மா)

அனுபவித்தார் சொல்லுஞ் செய்தி
ஆயிரத் தொரு பேச்சு—நாம்
அரிய மனிதப் பிறவியெடுத்தும்
அருமை குலைந்தால் ஏச்சு (மா)

தினமிப் பாடம் படித்துவந்தால்
சிறந்த ஊக்கந் தோன்றும்—நாம்
செய்தொழில்கள் அனைத்திலும் ஜெயம்
சேரு மேஎஞ் ஞான்றும் (மா)

## 22. சகுந்தலை

| | | | |
|---|---|---|---|
| இருடி | துருவாசர் | பார்த்திபன் | ஏமாற்றுகிறாள் |
| குட்டி | விருப்பம் | மணவினை | ஆசீர்வதித்தார் |
| பட்சி | ஸ்நானம் | ஆற்றோணா | அஸ்தினாபுரம் |
| ஓடை | பத்தினி | துஷ்யந்தன் | ராஜாதிராஜன் |
| நங்கை | ஆசிரமம் | அழைத்தார் | சேவிலித்தாயர் |
| துக்கம் | வனிதை | கருத்தூன்றி | கோடூரச்செயல் |
| பரதன் | காப்பாற்ற | துக்கசாகரம் | சாபவிமோசனம் |
| அமயம் | கௌதமி | கலங்கினான் | கன்னிப்பருவம் |
| சகுந்தம் | பாங்கியர் | பெண் துறவி | கண்ணுவமுனி |
| அனுமதி | முழுமனம் | முனிபுங்கவர் | மங்கையர்க்கரசி |
| சேடியர் | வருமட்டும் | இளங்கன்னி | பண்டைநிகழ்ச்சி |
| நல்லாள் | ததும்பியது | விரும்பினான் | |

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கண்ணுவ முனி என்னும் ஒரு ரிஷி இருந்தார். அவருக்குச் சகுந்தலை என்னும் ஒரு பெண் இருந்தாள். அவள் சிறு குழந்தையா யிருக்கும் போது சகுந்தப் பட்சியினால் காப்பாற்றப்பட்டதனால், முனிவர் அக் குழந்தைக்குச் சகுந்தலை எனப் பெயரிட்டார். அந்த இருடி அவ் விளங்குழந்தையை மிகவும் பிரியமாய் நேசிக்க, அப்பெண் குழந்தையும் முனிவரைத் தன் தந்தையென்றே நினைத்து நேசித்து வந்தது. ஆண்டுகள் பல சென்றன. அப்பெண்ணும் கன்னிப் பருவம் அடைந்தாள். சகுந்தலைக்கு இரு பாங்கியர் இருந்தனர். அவர்களோடு சகுந்தலை இனிமையாகக் காலங்கழித்து வந்தாள். ஒரு நாள் அஸ்தினா புரத்து

அரசனுகிய துஷ்யந்த மகாராஜன் வேட்டையாடுவ தில் விருப்பமுற்றுத் தற்செயலாக ஆசிரமத்தின் அருகே வந்தான்; ஆங்கு விளையாடிக் கொண்டிருந்த இளங் கன்னிகையைக் கண்டு, அவளை நேசித்து, மணம் புரிந்துகொண்டான். அக்காலத் தில் கண்ணுவ முனிவர் வேறிடம் சென்றிருந்தார். அவர் திரும்பி வருவதற்கு முன் அரசனும் தன் நாடு செல்ல விரும்பினுன்; பிரியுமுன் அம்மங்கை யர்க் கரசியிடத்தில் தன் மோதிரத்தை யீந்து, அவளை விரைவில் தன் நாட்டிற்கு அழைத்துக் கொண்டு போவதாக உறுதிமொழி கூறினுன். ஆற்ருெணுத் துயரத்தோடு இருவரும் பிரிந்தனர்.

தன்னை விட்டுப் பிரிந்த கோமகனை எப்பொழு தும் எண்ணிக்கொண் டிருந்தாள் அவ்விள நங்கை. ஒரு நாள் அவள் ஆசிரமத்தி னருகே உட்கார்ந்து கொண்டு, துஷ்யந்தனை நினைந்து துயரத்தில் ஆழ்ந் திருந்தாள். அச்சமயத்தில் துருவாச முனிவர் வந்தார். சகுந்தலையைக் கண்ணுற்ற முனி புங்கவர் அவளை அழைத்தார். சகுந்தலை அவர் கூப்பிட்டதைக் கேளாது தன் காதலன் சிந்தனையில் கருத்தூன்றி யிருந்தாள். இதைக் கண்ட துருவாசர் கோபமுற்று, “பேதாய், நான் அழைத்ததை நீ கவனிக்கவில்லை. ஆதலால், உன் நாயகன் உன்னை அறவே மறந்து விடுவான்” என்று சபித்தார். சகுந்தலை அதை யும் கவனியாமல் அதிகக் கவலையில் ஆழ்ந்திருந் தாள். செவிலித் தாயர் இதைக் கேட்டுப் பயந்து

துருவாசரிடத்திலே வந்து சகுந்தலையை மன்னித்துச் சாப விமோசனம் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். உடனே துருவாசர், "சகுந்தலை தன் கணையாழியைக் கணவனிடத்தில் காட்டுவாளானால் தம் சாபம் நீங்கும்" என்று பகர்ந்தார். சேடியர் இத்துறவியின் சாபத்தை அந்நல்லாளிடம் கூறவில்லை. ஏனெனில் அவள் சாபத்தை யறிவாளானால், துக்க சாகரத்தில் மூழ்குவாள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சில நாள் கழிந்த பின்னர் கண்ணுவ முனிவர் தம் ஆசிரமத்திற்கு வந்தார்; சகுந்தலையின் மணவினையைக் கேட்டு மகிழ்ந்தார். "சகுந்தலை ஒரு ராஜாதி ராஜனைக் கணவனாகப் பெற்றாள். அவளுக்கு ஆண்மகவு பிறக்கும். அவன் இந்த ஆழி சூழ் உலகை அரசாள்வான்" என்று ஆசீர்வதித்தார்.

துருவாச முனிவர் இட்ட சாபத்தால் துஷ்யந்தன் மனைவியை மறந்து காலங் கழிக்கலானான். ஆனால் கண்ணுவ முனிவர் சாபத்தை யறிந்திலர். நாட்கள் பலவாகியும் பார்த்திபன் வந்து பாவையைக் கூட்டிச் சென்றிலன். "கணவனைப் பிரிந்து காதலி வாழ்வது நியாயமல்ல. ஆதலால், மகளே, நீ உன் கணவனிடத்திற்குச் செல்வதற்குத் தயாராகவிரு. உன்னை மன்னனிடத்தில் விரைவில் அனுப்புவேன்" எனக் கண்ணுவர் கூறினார்.

பிரயாணத்துக்கு வேண்டிய யாவும் ஆயத்தமாயின. வளர்த்த தந்தையை விட்டுப் பிரியச்

சகுந்தலை வருந்தினள்; பின்பு, முனிவரிடம் சென்று தான் செல்வதற்கு அனுமதி பெற்றனள்; பின்னர், இரண்டு துறவிகளும் ஒரு பெண் துறவி கௌதமியும் பின் செல்லத் தன் கணவனிடத்திற்கு ஏகினள்.

வழியில் ஒரு சிறு ஓடையில் சகுந்தலை குளிக்கச் சென்றனள். அவ்வமயம் விரலில் அணிந்திருந்த மோதிரம் அவ்வோடைக்குள் வீழ்ந்து விட்டது. சகுந்தலை அதனைக் கவனிக்கவில்லை. அரண்மனை வருமட்டும் மோதிரத்தை அவள் எண்ணிலள். இறுதியில் சகுந்தலை அரசன் சமுகத்தில் வந்து நின்றாள். ஆனால் துருவாச முனிவர் சாபத்தால் அவன் அவளை யறிந்துகொள்ள முடியவில்லை.

சகுந்தலை, தானே அரசனுடைய பத்தினியென்று கூறினாள். அவள் தன்னை ஏமாற்றுகிறாள் என்று அவள் கூறிய சொல்லை அரசன் ஏற்றுக்கொள்ள வில்லை. பின்னர்ச் சகுந்தலை வெட்கத்தோடும் வருத்தத் தோடும் திரும்பினள்; கண்களில் நீர் ததும்பியது. அரண்மனையை விட்டுத் திரும்பினதும் ஆகாயத்திலிருந்து ஒரு தேவமாது இறங்கி, அவ்வனிதையைத் தூக்கிச் சென்றாள்.

சிறிது நாளைக்குப் பின் ஒரு ஏழைச் செம்படவன் சகுந்தலை ஸ்நானம் செய்த ஓடையில் ஒரு மீனைப் பிடித்தான்; அதை இரு துண்டாக வெட்டிப் பார்க்க, ஓர் அழகிய மோதிரம் அதனுள் இருக்கக் கண்டான்; அதைக்கொண்டு வந்து துஷ்யந்தனுக்கு வெகுமதியாக அளித்தான். கணையாழியைக்

கண்டதும் அக்காவலனுக்குப் பண்டை நிகழ்ச்சி கள் பல அவன் ஞாபகத்திற்கு வந்தன. துக்கமும் கவலையும் அவனைத் துன்பப் படுத்தின. தனது கொடூரச் செயலுக்காக அவன் மனம் கலங்கினான்.

அரசன் சகுந்தலையைக் கண்டுபிடிப்பதற்குப் பல திசைகளுக்கும் தூதரை யனுப்பினான். ஆனால் பயனில்லை. ஆண்டுகள் பல சென்றன. ஒரு நாள்



அவ் வரசன் இந்திரனால் அழைக்கப்பட்டு விண்ணு லகு சென்றான்; அங்கு ஓர் இடத்தில் அழகும் வீரமும் ஒருங்கமைந்த ஒரு சிறுவன் ஒரு பெண் சிங்கக் குட்டியோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அரசனைக் கண்டவுடன் அச்சிறுவன்

தன் தாயிடத்திற்கு ஓடினன். அரசனும் அச்சிறுவன் பின் சென்று, சகுந்தலையைக் கண்டு, தான் செய்த கொடுஞ் செயலை மறக்குமாறு வேண்டினன்.

சகுந்தலை துஷ்யந்தனை முழு மனதோடும் மன்னித்து விட்டாள். துஷ்யந்தன் தன் மனைவியோடும், மகனோடும் தன் நாடு திரும்பினன். அவன் மகன் பெயர் பரதன். அவன் இந்திய அரசர்களுள் பெரும்புகழ் பெற்று விளங்கினன்.

### கேள்விகள்

1. சகுந்தலை என்ற பெயருக்குக் காரணம் என்ன?
2. துருவாசர் ஏன் சகுந்தலையைச் சபித்தார்?
3. சகுந்தலை எவ்வாறு சாப விமோசனம்பெற்றாள்?

### பயிற்சி

1. பெண்பாலுக்கு ஆண்பால் எழுது:— நங்கை, பெண்துறவி, பாங்கி, பத்தினி.

2. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களின் பொருள் வேறுபடாமல் எழுது.

i. சகுந்தம் என்ற சொல்லுக்குப் புள் என்று பெயர்.
ii. அரசனும் தன் நாடு செல்ல விரும்பினன்.
iii. ஆண்டுகள் பல சென்றன.

3. தொடரைப் பிரித்தெழுதுக:— கருத்தூன்றி, விருப்பமுற்று, வெற்றிடம், நல்லாள்.

4. சகுந்தலையின் மணவினையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்.

இங்குத் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாக ஒரு சொல்லமைத்து எழுது.

## 23. மகாத்மாவின் அருள் மொழிகள்



1. ஆண்டவன் தான் நமக்கு அடைக்கலம்; அவர் தான் நமது விதியை உறுதி செய்கின்றார்.
2. பிறரை அழிக்க விரும்புகின்றவன் தனக்குத் தானே அழிவைத் தேடிக் கொள்வான்; இது தான் இயற்கையின் விதி.
3. பகையை அன்பாலும், அசத்தியத்தைச் சத்தியத்தாலும், உள்ளக் கொதிப்பைப் பொறுமையாலும் வெல்ல முடியும்.
4. தன் இனத்தைச் சேர்ந்த மனிதனை, மனிதன் அடக்கி ஒடுக்கி வைப்பது பெருங் குற்றம்.

5. ஒவ்வொரு வீட்டிலும் நூல் நூற்கப் படுமாயின் நம் நாட்டுக்கு மில்கள் தேவையிரா; நமது வீடுகள் ஒவ்வொன்றும் சிறிய மில்லாகிவிடும்.

6. கற்களால் கட்டப்படும் ஆலயங்களைவிட, மக்கள் உடம்புகளே உண்மையான ஆலயங்கள்.

7. அஞ்சி ஓட்டம் எடுப்பது கோழையின் செயல்.

8. வேற்று நாட்டிலிருந்து உணவுகளை இறக்குமதி செய்யும் கொள்கை, நாட்டைப் பாழாக்கும்.

9. ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் அன்பும் சகிப்புத் தன்மையும் அதிகம்.

10. பெண்களின் நிலை உயரும்போது ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவர் நிலையும் உயரும் போது, மனித சமூகத்தின் நிலை யுயரும்.

11. தலைவர் என்போர் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாவிட்டால், தலைவரது அநீதியை எதிர்க்கும் உரிமையும் கடமையும் மக்களுக்கு ஏற்படுகின்றன.

12. தொண்டர்கள் முதன் முதலில் தங்கள் மனதைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவேண்டும்.

13. தொண்டு செய்ய முன்வருபவர்களுக்கு, பொறுமையும் சகிப்புத்தன்மையும் வேண்டும்.

14. தன்னைத்தானே சோதித்துக் கொள்வதால் பெருமையும், பிறரைச் சோதித்துக் கொண்டிருப்பதால் சிறுமையும் ஏற்படுகின்றன.

15. சுதேச உணர்ச்சி மனதில் வேரூன்றிவிட்டால், எதற்குமே இந்தியா அயல் நாட்டை எதிர் பார்க்க நேரிடாது.

16. நாம் உபயோகமற்ற ஆடைகளைக் களைந்து விடுவதுபோல், தவறான தலைமையை நீக்கவும் சுதந்திரம் உண்டு.

17. இராணுவ பலத்தால் உலகம் முழுவதையும் எதிர்த்துப் போரிடுவதோ, அதில் வெற்றி காண்பதோ இயலாது.

18. தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற இந்திய சுதந்திரத்தை, அத்தூய்மையான நேரிய வழி களிலேயே காப்பாற்றி வரவேண்டும்.

19. சம்பாதிப்பதைச் சமமாக்க வேண்டுமானால், அமைதியும், பொறுமையும் தரும் கல்வி தேவை.

20. பழிவாங்கும் உணர்ச்சி விஷச்சக்கரம். அதனால் மக்களுக்கு இன்னல் விளைகின்றது.

21. இன்று இந்தியாவுக்குத் தேவை ஒரே விதமான ஆடையல்ல; நல்ல உள்ளமே.

22. உபவாசம் என்பது ஆத்ம சுத்திக்கான நட வடிக்கை.

23. தொழிலுக்குள்ள மதிப்பு பணத்துக்கு இல்லை.

24. காங்கிரஸ் ஒருக்காலும் ஹிந்து ஸ்தாபனமாக மாற முடியாது. அவ்வாறு ஆக்குவோர் இந்தி யாவிற்கும் ஹிந்து மதத்திற்கும் பகைவராவர்.

25. வாழ்க்கை என்ற கற்பகத்துக்குத் தியாகிகள் தங்கள் உதிரத்தை நீராகப் பாய்ச்ச வேண்டும்.

26. எல்லா மதங்களும், பகைவர்களை நேசிக்க வேண்டும் என்றுதான் போதிக்கின்றன.

27. யாராவது கன்னத்தில் அடிக்க நேர்ந்தால், என் தலையைக் கொடுக்கவும் இசைவேன்; ஆனால் யாருக்கும் தலை வணங்கேன்.

28. சுகாதார விதிகளின்படி உபவாசம் ஏற்றது.

29. ஓய்வு நேரங்களில் எழுத்தறிவு இயக்கத்தை மாணாக்கர்கள் விளக்கவேண்டும்.

30. பழிவாங்கும் மனப்பான்மை, காட்டுமிராண்டித் தனமானது; மிகவும் மோசமானது; ஆதாய மற்றது; ஒற்றுமையைச் சிதைத்து விடுவது.

பிள்ளைகளே! நமது மகாத்மாவின் அன்பு கனிந்து ஒழுகும் அருள் மொழிகளை நீங்கள் மிகுந்த ஆவலுடன் படித்தீர்கள். அவர்களது ஒவ்வொரு வாக்கியமும் மாணிக்கமாகும். ஒவ்வொரு வாக்கியத்தையும் படித்து அதிற் சொல்லப்படுகின்ற பொருளை நன்றாக மனத்திற்கொள்ள வேண்டும். ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். அவர் நமது நன்மைக்காகவும், நாட்டின் நலத்திற்காவும் தமது ஆழ்ந்த அறிவினாலும் அனுபவத்தாலும் ஆராய்ந்து நமக்கு அளித்துள்ள அருள் மொழிகளைக் கடைப்பிடித்து அவற்றின்படி ஒழுகவேண்டும். அதனால் நாம் ஒத்த உணர்ச்சியுடனும், ஒற்றுமையுடனும் கூடிச்சிறந்து வாழ்வோம். நமது நாடும் முன்னேறும்.

# செய்யுட் பாடம்

## 1. நன்னெறி

1. நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினுந் திண்மைநிலை போம்.

2. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு.

3. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

4. இன்சொல்லால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொல்லால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய், பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல்.

5. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

## 2. நீதி வெண்பா

1. ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

2. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

3. உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து.

4. பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

## 3. நீதிநெறி விளக்கம்

1. அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின்ஊங் கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

2. கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

# 4. தனிப்பாடல்கள்

## உத்தமர், மத்திமர், அதமர் இவர் எனல்

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார்.

## கல்விக்கு எல்லை இல்லை என்பது

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

## வைக்கோலுக்கும் யானைக்கும் சிலேடை

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

## சு. பாத்திரத்தில் செலவழியாத செல்வம் வீணில் அழியும்

நம்ப ரடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகுங் காண்.

## கர்வம் கூடாது

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய் !
கொல்லுலைக் கூடத்தி னால்.

## 5. கயிலாசநாதர் சதகம்

### செல்வச் சிறப்பு

பொருளுள்ள பேர்களுக் கெழிலுண்டு புகழுண்டு
புண்யவச மிக்க வுண்டு
பூதலத் தவரெலாம் கண்டவுட னேதொழுது
பூபதி குபேரன் என்பார்
திருகோன்றி லாதமதி யுண்டுதிற முண்டுமெய்த்
தேசிகர்தம் அருளு முண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பர்கள் பெருமையும்
தீரமோடு வீர முண்டாங்
கருளுண்டு பந்துசன வுறவுண்டு நண்பினர்க
ளானோர்க ளுண்டு நிதமும்
அவர்முகந் தன்னிலழ குண்டுகளை ப...
லானந்த பூர்த்தி யுண்டு
கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவ
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவா சனே.

139746

## 6. விவேக சிந்தாமணி

ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித் துண்ல...
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமிர்...
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவ... ராய்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே.

மெய்யதைச் சொல்வா ராகில் விளங்கிடு மேலு நன்
வையக மதனைக் கோள்வார் மனிதரிற் றேவ ராவா
பொய்யதைச் சொல்வா ராகில் போசன மற்ப மாகு
நோய்யவ ரிவர்க ளென்று நோக்கிடா ரறிவுள் ளோரே

# தி மஹான் வாழ்த்து

ல மருந்திம் மருந்து—நன்மை
நல்கிய காந்திதன் நாம மருந்து

வல்லமை யுள்ள மருந்து—நம்
வாழ்வை நிலம்பெறச் செய்த மருந்து (நல்ல

தந்நலங் கருதா மருந்து—தாய்
நாட்டிற்கே சேவை புரிந்த மருந்து (நல்ல

தீண்டாமை தீர்க்கு மருந்து—யார்க்கும்
தெவிட்டப் படாது சிறந்த மருந்து (நல்ல

ஆண்டா னளித்த மருந்து—நாட்டில்
அடிமை வாழ்வை அகற்றும் மருந்து (நல்ல

ஆண்மை யளித்த மருந்து—இங்கு
அன்னிய ராட்சி யழித்த மருந்து (நல்ல

கதிரினைச் சுற்றும் மருந்து—யாரும்
கருதிக் களித்திடும் கண்ய மருந்து (நல்ல

கதராடை காட்டும் மருந்து—கொடுங்
காதகர்க் கெல்லாம் கசக்கும் மருந்து (நல்ல